Registered as a Newspaper in Ceylon

விலைசதம் 10

# ஈழநாடு

EELA NADU

| ஈழநாடு சந்தா விபரம் | இந்தியா — இலங்கை வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி ஆனி 13 ஆம் நாள் லபர் 15 (26-6-64) வெள்ளிக்கிழமை இதழ் 138

# ராஜினாமா செய்வதற்கு வவனியா எம்பி ஆதரவு

## 'உறுதியானசெயல்இல்லையெனில் உரிமைகளைப் பெறமுடியாது'

வற்றுப்பளை, வியாழன்

"தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பெறுவதற்கு அடுத்து என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதற்கு தமிழ் பேசும் மக்களிடம் புதிய கட்டளைகளைப் பெறும் பொருட்டு தமிழ் பேசும் எம். பி.க்கள் தங்கள் பார்லிமெண்ட் ஸ்தானங்களை ராஜினாமாச் செய்து மீண்டும் தேர்தலில் போட்டியிட வேண்டுமென்ற தமிழரசுக் கட்சி மத்திய செயற்குழுவின் தீர்மானத்தை வரவேற்கிறேன்" என்று வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் வற்றுப்பளையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் தெரிவித்தார்.

"துணிச்சலான' உறுதியான நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டாலொழிய தமிழ் மக்களின் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண முடியாது. நாம் எல்லோரும் எமது பார்லிமெண்ட் ஸ்தானங்களை ராஜினாமாச் செய்து மக்களிடம் புதிய கட்டளைகளைப் பெறுவோம்" என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

திரு. சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது:-

மொழிப்பிரச்னையைத் தீர்க்காது அரசாங்கம் தொடர்ந்து கடைப்பிடித்துவரும் இன ஒதுக்கல் கொள்கைக்கு எதிரான முதல் நடவடிக்கையாக தமிழரசுக் கட்சி தமிழ் எம். பி.க்களை தமது பதவிகளைத் துறக்கச் சோருவதென இப்போது தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சிங்கள மொழிக்கு சமமான அந்தஸ்து தமிழுக்கு வழங்கப்படவேண்டுமென்ற தமிழ் எம். பி.க்களின் நியாயமான கோரிக்கையை அரசாங்கம் புறக்கணித்த பின்னர் இந்த நாட்டிலுள்ள தமிழர்களுக்கு நாம் பார்லிமெண்டில் பிரதிநிதித்துவம் வகிக்கிறோம் எனக் கூறிக்கொண்டிருப்பது வெறும் ஏமாற்றமானதொரு காரியமே என நான் சுமார் இருவருடங்களுக்கு முன்னர் கருத்து வெளியிட்டிருந்தேன். துணிவுடன் செயல்முறையில் நடவடிக்கை மேற்கொண்டாலொழிய தமிழர்களை எதிர்நோக்கியுள்ள மொழிப் பிரச்னையை தீர்க்கமுடியாது. அழகான இலங்கையின் பிரஜைகள் என்ற முறையிலான தமிழர்களின் அந்தஸ்தைக் காப்பாற்ற முடியாது.

தமிழ் பேசும் எம். பி.க்கள் எல்லோரும் தமது பதவிகளைத் துறந்து எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய புதிய நடவடிக்கைக்கு தமிழ் பேசும் மக்களிடம் அங்கீகாரம் பெற முயற்சிக்கவேண்டும் என திருக்கோணமலையில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் செயற்குழுவின் தீர்மானத்தை நான் வரவேற்கின்றேன்.

எமது பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு எத்தகையவிதமான நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டுமென இந்த நாட்டிலுள்ள தமிழ் பேசும் மக்கள் இனி எதுவித தாமதமுமின்றித் தீர்மானிப்பதற்காக நாம் நமது பதவிகளைத் துறப்போமாக.

## கம்பன்விழா மலர்

இலங்கை கம்பன் கழகம் இம்மாதம் 27-ந்திகதி (நாளை சனிக்கிழமை) கவியரசர் கம்பனுக்கு விழா எடுப்பதையொட்டி நாளை 'ஈழநாடு' பத்திரிகைஅதிக பக்கங்களுடன் 'கம்பன் விழா மலரா'க வெளிவருகின்றது.

ஈழத்தின் முதுபெரும் புலவர் திரு. கந்தமுருகேசனார், கவிஞர் 'யாழ்ப்பாணன்', கவிஞர் இ. நாகராஜன் ஆகியோரின் கவிதைகளும், பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை, திரு. ச. அம்பிகைபாகன், வித்துவான் பொன். முத்துக்குமாரன் ஆகியோரின் கட்டுரைகளும் "சொக்கன்" எழுதிய கவிதை நாடகமும் மலரில் இடம்பெறுகின்றன.

உங்கள் பிரதிக்கு முன்கூட்டியே ஒழுங்குசெய்து கொள்ளுங்கள். விலையில் மாற்றமில்லை.

எம். பி. க்கள் ராஜினாமா:

## தமிழரசு மத்திய கமிட்டி மறு பரிசீலனை செய்யும்

கொழும்பு, வியாழன்

தமிழ்பேசும்மக்களின் சுயநிர்ணய உரிமையைப் பெறுவதற்கான புதிய போராட்டத்திற்கு தமிழ் பேசும் மக்களிடம அதிகாரம் பெறும் பொருட்டு தமிழரசுக் கட்சி எம்.பி.க்கள் தங்கள் பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டுமென்று கட்சியின் செயற்குழு அண்மையில் மேற்கொண்ட முடிவைத் தமிழரசுக் கட்சியின் மத்திய கமிட்டி மறுபரிசீலனை செய்யவிருக்கிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை திருக்கோணமலையில் தமிழரசு கட்சியின் செயற்குழு கூடி தமிழ் மக்களின் உரிமைகளைப் பெறும் பொருட்டு தமிழரசுக் கட்சி எம். பி க்கள் சகலரும் தங்கள் பதவியை ராஜினாமா செய்யவேண்டுமென்று தீர்மானித்திருந்தது நேயர்கள் அறிந்ததே.

செயற்குழுவின் முடிவைக் கண்டனம் செய்து தமது பதவியை ராஜினாமா செய்த திரு. எம். திருச்செல்வம் கியூ. ஸி., இதுபற்றித் தெரிவிக்கையில்; பேச்சுக்கள் மூலம் பிரச்னையைத் தீர்க்க விரும்பாத சில சக்திகளின் சுயநலமே திருமலை முடிவுக்கு காரணம் என குறிப்பிட்டார்.

## வடக்குகிழக்கு மாகாணங்களில் தமிழ் ஊழியர்களை அமர்த்துக

### அரசாங்க எழுதுவினைஞர் சங்க கூட்டத்தில் வரும் பிரேரணை

கொழும்பு, வெள்ளி

தமிழ் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் மூன்றாவது ஆண்டு பொதுக்கூட்டம் நாளைக்காலை வெள்ளவத்தையிலுள்ள நாவலர் கழக மண்டபத்தில் நடைபெறும். இக்கூட்டத்தில் கொண்டுவரவிருக்கும் 3 பிரேரணைகள் வருமாறு;-

தமிழ்பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களாகிய வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள அலுவலகங்களுக்கு எந்தவித இடர்பாடுகளுமின்றி தாய்மொழியில் பொதுமக்கள் அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ள வசதியளிக்குமுகமாக தமிழில் கடமையாற்ற தகுதிவாய்ந்த தமிழ் ஊழியர்களை அமர்த்துமாறு இச்சங்கம் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கின்றது.

தலைநகரமான கொழும்பில் தான் பெரும்பாலான திணைக்களங்கள் இருப்பதனாலும் பிற பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு தங்களது கருமங்களை செய்ய வசதிக்குறைவு ஏற்படுவதனாலும் மாகாண ரீதியில் சகல திணைக்களங்களையும் அந்தந்த அலுவலகங்களுக்கு ஏற்ப முரண்பாடு எதுவுமின்றி ஊழியரை நியமித்தும் தற்பொழுது நிலவும் துன்பங்களை போக்கும் முகமாகவேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் சங்கம் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கின்றது.

தமிழ்மொழி மூலம் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கஎழுதுவினைஞர்களுக்கு தமிழ்மொழியிலேயே நிரந்தரமாக வேலை செய்ய வசதிகள் அளிப்பதுடன் அவர்களது உத்தியோகத்தை உறுதிப்படுத்துவதற்கு சிங்களத் தேர்ச்சியைக் கட்டயப்படுத்தாமல் சிங்கள மொழி மூலம் தெரிவு செய்யப்பட்ட ஊழியர்களைப் போன்று அவர்களையும் சேவையில் உறுதிப்படுத்த வேண்டும்என்றும் தன் மொழி மூலம் தெரிவு செய்யப்பட்ட ஊழியர்களின் சேவையை உறுதிப்படுத்துவதில் பாரபட்சம் எதுவும் காட்டப்படலாகாது என்றும் அரசாங்கத்தை இச்சங்கம் கேட்டுக் கொள்கின்றது.

## இந்திய தூதர் இன்று வருகிறார்

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷனர் திரு. பி. கே. கபூருடன் திருமதி கபூரும் அவர்களின் புதல்வன் அருண்கபூரும் இன்று யாழ்ப்பாணம் வருகின்றனர், இன்று முற்பகல் 10-45 மணியளவில் மோட்டார் காரில் யாழ்ப்பாணம் வந்து சேரும்ஹைகமிஷனர் இன்றுமாலை 6 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வரவித்தியாலய மண்டபத்தில் இலங்கை-இந்தியா நட்புறவுச் சங்கத்தை அங்குரார்ப் பணஞ் செய்து வைப்பார்.

## கம்பராமாயண சித்திரப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கை கம்பன் கழகத்தின் ஆதரவில் "ஈழநாடு" பத்திரிகையில் வெளியான கம்பராமாயண சித்திரப் போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. போட்டி முடிவுகள் வருமாறு:

முதற்பரிசுக்குரிய டாக்டர் 'பி. எஸ்.' ஞாபகார்த்த தங்கப் பதக்கம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த செல்வன் இ. கங்காதரனுக்கு கிடைத்துள்ளது.

இரண்டாம் பரிசுக்குரிய சி. கெலிசம்மா ஞாபகார்த்த வெள்ளிப் பதக்கத்தை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த செல்வன் கு. சிவகுமார் பெறுகின்றார்.

மூன்றாவது பரிசான தனலக்குமி புத்தகசாலையார் வழங்கும் புத்தகப்பரிசுகளை சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியைச் சேர்ந்த செல்வி கோமதி கந்தையாவும், யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியைச் சேர்ந்த செல்வன் இலங்கநாதனும் பெறுகின்றனர்.

இப்போட்டிக்கு மொத்தம் 28 சித்திரங்கள் வந்திருந்தன. மத்தியஸ்தர்களாக திருவாளர்கள் ச. பெனடிக்ற், ச. மயில்வாகனன், பொ. நடராசன் ஆகியோர் கடமையாற்றினர்.

பரிசுகள் நாளை சனிக்கிழமை வண்ணை. வைத்தீஸ்வரவித்தியாலயத்தில் நடைபெறும் கலைவிழாவில் வழங்கப்படும். பரிசுகளை மேயர் திரு. தா. ச. துரைராசா வழங்குவார்.

### மணிவாக்கு

ஒருவரையும் பாவியாக நான் கருதவில்லை. எப்படிப்பட்ட கொடியவனும் ஒருநாள் மனம் திருந்தி நல் வழியில் நடக்க முடியும் என்ற நம்பிக்கையுடையவன் நான்.

— மகாத்மா காந்தி

ஈழநாடு
EELA NADU

EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegram: EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு
ஆனி மீ 13 உ (26-6-64)

## சாதிகள் எத்தனை?

"சாதிகள் இல்லையடி பாப்பா, குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாபம்" என்று பாடினர் பாரதியார். சாதிகள் இரண்டே. இட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தோர் என்று ஔவைப்பிராட்டியார் கூறினர். ஆனல் சாதிகளுக்கு இப்பொழுது சுகாதார விடமைப்பு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. கு. பாலசிங்கம் காலத்துக்கேற்ற அருமையானதொர் விளக்கம் கொடுத்துள்ளார். உழைப்பினுல் பொருளாதாரத்தை விருத்தி செய்பவர்கள் உயர்ந்தோர் என்றும் அவர்கள் உழைப்பை எதிர்பார்த்து அதில் தங்கிபிருப்பவர்கள் தாழ்ந்தோர் என்றும் திரு. பாலசிங்கம் தெல்லிப்பழை மகாஜன கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் கொடுத்த விளக்கம் குறிப்பாகத் தமிழ்பேசும் மக்கள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியது.

அந்நிய ஆட்சி நீங்கிவிட்டபோதிலும் அப்பொழுது ஏற்பட்ட உத்தியோக மோகம் இன்னும் தமிழ்மக்களிடமிருந்து நீங்கவில்லை தமிழ்மக்களுக்கு இனியும் அரசாங்கத்தில் உத்தியோகம் கிடைப்பதற்கு வாய்ப்பில்லையென்றும் கைத்தொழில், விவசாயம்தான் அவர்களுக்கு இனி வாழ்வளிக்க முடியுமென்றும் அரசியல் கட்சிகளும், சமூக ஊழியர்களும் எடுத்துக் கூறிவருகின்றபோதிலும் கைத்தொழில், விவசாயத்தின்மீது இன்னும் அக்கறையேற்பட்டுவிட்டதாகக் கூறமுடியாது. ஆலோசனைகூறும் அரசியல் கட்சிகளோ மற்றவர்களோ பொருளாதார முன்னேற்றத்துக்கான திட்டங்களைத் தரவில்லையென்றே இன்றைய கல்வித் திட்டம் நாற்காலி உத்தியோகத்தைத் தவிர வேறு எதற்கும் வழிகாட்டவில்லையென்றே சிலர் வாதிக்கலாம். ஆனலும் இந்த வாதத்தை முற்றாக ஏற்றுக் கொள்ள முடியாது. முயற்சியுடையார் இப்பொழுதும் பிறரை எதிர்பார்க்காது கைத்தொழில், விவசாயம்ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளனர்.

ஒரு குறிப்பிட்ட தொழிலைச் செய்பவர் அத்தொழிலின் பெயரால் சாதிக்யாப் பிரிக்கப்பட்டு வந்துள்ள முறை இன்றும் நீங்கவில்லை. ஒரு தொழிலை ஒரு பிரிவினர்தான் செய்யவேண்டுமென்றும் வேறு ஒருவர் அதே தொழிலைச் செய்வது இழுக்கு என்றும் தவருன அபிப்பிராயம் பல காலமாக இருந்துவருகிறது. இவ்வழக்கம் தமிழ் சமூகத்தில் வேருன்றிவிட்ட காரணத்தால் தொழிலில் தமிழ் மக்கள் முன்னேற முடியாதிருக்கிறதென்றும் கூறலாம். வள்ளுவரைப்பற்றியும் குறளைப்பற்றியும் மகாநாடுகளும் விழாக்களும் நடைபெற்றபோதிலும் செய்யும் தொழிலினுல் பிறப்பில் வேற்றுமையில்லையென்ற வள்ளுவரின் அறிவுரையை இன்னும் நாம் உணரவில்லை.

இலங்கை சுதந்திரமடைந்து பதினறு ஆண்டுகள் கழிந்துவிட்டபோதிலும் பொருளாதாரத்துறையில் நாடு முன்னேற்றமடையாததற்கு ஆட்சி பீடத்தில் அமர்ந்திருந்த அரசாங்கங்கள் சரியான முறையில் திட்டமிட்டு அதற்கான முயற்சிகளைச் செய்யவில்லையென்பது உண்மையேயாயினும், மக்களின் மனேபாவமே மூலகாரணம் என்பதையும் மறுக்க முடியாது. இதேசமயம் இலங்கை சுதந்திரமடைந்தபின் பலவழிகளிலும் தமிழ் பேசும் மக்களுக்கு கஷ்டங்கள் ஏற்பட்டுள்ளதுடன் வேலை வாய்ப்புகளும் இதர சமூகத் தலைவர்களுக்குள்ள சந்தர்ப்பங்களும் இல்லாதுபோகின்றன. என்றாலும் தமது நிலையை உணர்ந்து தமது பொருளாதாரத்தை விருத்தி செய்வதில் குறிப்பிடக்கூடியவரையிலாவது தமிழ் மக்கள் இதுவரை முயற்சி மேற்கொள்ளவில்லை. இனியும் இதே நிலை தொடர்ந்து நீடித்தால் தமிழ் பேசும் மக்களின் எதிர்காலம் எவ்வாறு இருக்குமென்பதை நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. இச்சந்தர்ப்பத்தில் சாதிகள்பற்றி திரு. பாலசிங்கம் கொடுத்துள்ள புதிய விளக்கம் தமிழ் பேசும் மக்களின் கண்களைத் திறக்க உதவவேண்டும்.

ஆசிரியருக்குக் கடிதம்

# சர்வஜன வாக்கெடுப்பு மூலம் சுய நிர்ணயத் தீர்மானம்

தமிழரசுக்கட்சியின் மத்திய செயற்குழு சென்ற வார இறுதியில் கூடியபோது நிறைவேற்றிய தீர்மானத்தின் முழு விபரத்தையும் இப்போது தான் பார்வையிட்டேன்.

தமிழரசுக்கட்சியின் மத்திய செயற்குழுவின் தீர்மானத்தின் இறுதி வாசகம் பின்வருமாறுபிரமாதப்படுத்தப்பட்டிருக்கிறது: 'சகலதமிழ்பேசும்எம். பி.க்களும் தமது பதவிகளைத் துறக்க வேண்டும். துறந்தபின் தமிழ்பேசும் மக்களின் சுதந்திரத்தைப் பெறுவதற்காக உறுதியுடன் உழைக்க வேண்டும். இவ்விதம் வேண்டுகோள் விடுக்கிறது. இலங்கை தமிழரசுக்கட்சி, 1947-ம் வருடம் முதல் இப்போதுவரையான காலத்தில் இடம்பெற்ற பொதுத் தேர்தல்களிலும் இடைத் தேர்தல்களிலும்தமிழ் பேசும் பொதுமக்கள் தமக்கு நல்லவற்றை தமது உரிமை மூலம் தீர்மானிக்க முற்பட்டார்கள். 1947-ம் வருடத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழ்பேசும் மக்கள் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், திரு. எஸ். தொண்டமான், திரு. ஜி. ஆர். மோத்தா ஆகியோரை அங்கத்தவர்களாகக் கொண்ட அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தமக்கு நல்லதைச் செய்யுமென அதாவது 'ஐக்கிய இலங்கையை உருவாக்கஉதவுமென'த் தீர்மானித்திருந்தனர்.

1949-ம் வருடத்தில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், திரு. சி. வன்னியசிங்கமும் தமது தொகுதி வாக்காளரிடமிருந்து அங்கீகாரம் பெருது தமிழ் மக்களுக்கு எது நல்லது எனத் தமது எண்ணத்தில்பட்டதோ அதைச் செய்யும் உத்தேசத்தோடு தமிழ் காங்கிரஸிலிருந்து பிரிந்து சமஷ்டி இணைப்பில் சுயநிர்ணய உரிமைபெற்ற ஒரு தமிழ் அரசை சத்தியாக்கிரகத்தின் மூலம் பெறுவது எனக் கொள்கை வெளியிட்டு தமிழரசுக்கட்சியை உருவாக்கினர்கள். 1952-ம் வருடத்தில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தோல்வியடைந்தார். தமிழரசுக்கட்சியைப் பார்லிமெண்டில் பிரதிநிதித்துவம் வகிக்க திரு. வன்னியசிங்கமே அப்போது இருந்தார். 1956-ம் வருடத்தில் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகமும் அவரது கட்சியும் தமக்கு நன்மை செய்யுமென தமிழ் பேசும்மக்கள் முடிவு செய்தார்கள். இதன் காரணமாக அதிகமான தமிழரசுக்கட்சி அங்கத்தவர்களை பொதுமக்கள் பார்லிமெண்டுக்குத்தெரிவு செய்தார்கள். அந்த வருடம் தொடக்கம் தமிழரசுக்கட்சியினர் இலங்கைவாழ்தமிழ்பேசும் மக்களுக்கு தோட்டப்பகுதியிலும் மற்றப்பகுதிகளிலுமுள்ள சமீபத்திய இலங்கை இந்திய தமிழர்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சியாக உரிமை கொண்டார்கள். இலங்கைத் தொழிலாளர்கள் கிரஸ், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய இயக்கங்களைச் சேர்ந்த திரு. தொண்டமான், ஜனப் அசீஸ் ஆகியோரது எதிர்ப்பையும் பொருட்படுத்தாது இவ்வித உரிமை கொண்டார்கள்.

1956-ம் வருடத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த 15 அங்கத்தவர்கள் பார்லிமெண்டுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் மூலம் கட்சியின் கொள்கை தமக்கு நன்மை அளிக்குமென இப்பகுதியினரால் தீர்மானிக்கப்பட்டது. 1956-ம் வருடம் முதல் 1964-ம் வருடம் வரை (இரு பொதுத் தேர்தல்கள் உட்பட) 1960-ம் வருடத்தில் திரு. செல்வநாயகத்தினதும் அவரது கட்சியினதும் கொள்கை (செயற்குழுவின் தீர்மானத்தில் தெரிவித்திருந்தபடி அப்படியே கூறுவதாயின்) இந்த நாட்டிலுள்ள தமிழ் பேசும்மக்களை அடிமைப்படுத்தவும் சீர்கேடடையச் செய்யவுமே உதவியது. அவர்களது சரித்திரகாலப் புகழ் வாய்ந்த உயர்ந்த நிலையும் தமிழ்மொழியின் அந்தஸ்தும் தாழ்த்தப்பட்டது.

தமிழரசுக் கட்சி எம்.பி.க்கள் பதவிதுறக்கும்போது அதன் காரணமாக நடைபெறவிருக்கும் இடைத் தேர்தலில் திரு. செல்வநாயகம் பொதுமக்களிடமிருந்து சமஷ்டி பற்றிய கொள்கைக்கோ அல்லது தனிநாடு கோருவதற்கோ அங்கீகாரம்பெற முயற்சிக்கப்போகிருர் என நான் கேட்க விரும்புகிறேன். ஈழத் தமிழர்களுக்கெனவும் தோட்டப்பகுதிகளில் வாழும் தமிழர்களுக்கெனவும் புறம்பான பல ராஜ்யங்கள் அமையப்போகின்றனவா?

கீழ்வரும் மூன்று தெளிவான விஷயங்களில் தீர்வு காண தமிழரின் பிரதேசங்களில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த ஏன் அவர் நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது?

1. ஈழத்திலுள்ள தமிழர்கள் ஐக்கிய இலங்கையை விரும்புகிருர்களா? சமஷ்டியை விரும்புகிருர்களா? அல்லது தனியே பிரிந்து வாழ்வதை விரும்புகிருர்களா?

2. தமது உரிமைகளைப் பெறும் போராட்டத்தில் ஈழத் தமிழர்கள் தோட்டப்பகுதிகளிலுள்ள தமிழர்களோடு இணைந்து செயலாற்ற விரும்புகிருர்களா?

3. போராட்டமுறை சத்தியாக்கிரகம், அகிம்ஸை ஆகிய எல்லைக்குள் அமைந்திருக்க வேண்டுமா அல்லது சரித்திரத்தில் காணப்படும் முறைகள் அனுசரிக்கப்பட வேண்டுமா? அல்லது வேறும் புதிய வழிகளில் அமையவேண்டுமா?

தெளிவுபடுத்தப்பட்டவிஷயங்களில் சர்வஜன வாக்கெடுப்பு மூலமோ அல்லது மக்கள் தீர்ப்புமூலமோதான் ஒரு சுயநிர்ணய நிலையை அடைய முடியும்.

செ. சுந்தரலிங்கம்
'லிங்கம் தோட்டம்'
வவனியா.

# "சாதி அடிப்படையில் வட்டாரங்களை பிரிக்கக்கூடாது"

## வட்டார விஸ்தரிப்பு கமிஷன் முன் திரு. துரைராஜசிங்கம் சாட்சியம்

யாழ்ப்பாணம், வெள்ளி

"சாதி அடிப்படையில் வட்டாரங்கள் பிரிக்கப்படுவதை நான் முழுமூச்சாக எதிர்க்கிறேன். சாதி ஒழியவேண்டும் என்றுகூக்குரல் எழுப்பும் இந்நேரத்திலே சாதி அடிப்படையில் வட்டரங்களை பிரிப்பது சாதிப்பாகுபாட்டிற்கு ஆதரவளிப்பதாக இருக்கும். தமிழர் எல்லோரும் சாதிமத பேதமின்றி உரிமையைப் போருக்கு தயாராகும் நேரத்தில் பெரும்பன்மை, சிறுபான்மை என்று தமிழர்களுக்கிடையே பிரிவை ஏற்படுத்துவது உரிமைப் போராட்டத்தை பலவீனப்படுத்திவிடும். பொதுவான ஒரு வட்டரத்தில் சிறுபான்மைத் தமிழர் ஒருவர் போட்டியிட்டு வெற்றி பெறுவதாலேயே சாதிபாகுபாட்டை ஒழித்து சிறுபான்மை மக்களுக்கு நன்மை செய்ய முடியுமென கருதுகிறேன்".

யாழ்ப்பாண மாநகரசபை வட்டார விஸ்தரிப்பு கமிஷனர் திரு. சி. எஸ். மார்டின் முன்னிலையில் நல்லூர் வட்டார அங்கத்தவர் திரு. ஏ. துரைராஜசிங்கம் நேற்று காலை சாட்சியமளிக்கும்போதுமேற்கண்டவாறு கூறினர்.

திரு. துரைராஜசிங்கம் மேலும் கூறியதாவது:

சாதி ஒழிய வேண்டுமென போராடும் சிறுபான்மைத் தமிழர்கள் சாதி அடிப்படையில் வட்டாரம் பிரிக்கப்படவேண்டுமென்று கருதுகிருர்கள். ஆனல் 3-ம் வட்டாரத்தில் இதற்கு முன் நடைபெற்ற தேர்தலில் அவ்வட்டாரத்தில் சிறுபான்மைத் தமிழர்கள் கூடுதலாக இருந்தும், சிறுபான்மைத் தமிழர் வெற்றியடைய முடியவில்லை. அதே நேரத்தில் சிறுபான்மைத் தமிழர் குறைவாக உள்ள 14-ம் வட்டாரத்தில் கடந்த இரு தேர்தல்களிலும், சிறுபான்மைத்தமிழர் ஒருவர் வெற்றி பெற்றுள்ளார். சிறுபான்மைத் தமிழர் பிரிந்து நின்று தங்கள் வட்டாரத்தை முன்னேற்ற முடியாது. மற்றவர்களுடன் ஒற்றுமைப்படுவதாலேயே சிறுபான்மை மக்கள் முன்னேற்றமடையலாம். ஆதலால் சாதி அடிப்படை

(5-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

தமிழகத்திலே பார்த்த ஊர்களையும் கோவில்களையும்பற்றி எழுதிக்கொண்டே போனல் பல நாட்களாகும், வாரங்களுமாகும். உங்களுக்குப் பொறுமை இராது. அதற்குள்ளாக இங்கு ஒவ்வொருநாளும் எவ்வளவோ நடக்கின்றன. அதனல் சிதம்பரத்தில் கண்டதைப்பற்றிமட்டும் இங்கு எழுதிவிட்டு, மற்ற தமிழ் நாட்டுக் கதைகளை பின்னல் வேறிடத்தில் சொல்லுகின்றேன். சரிதானே?

சிதம்பரத்திலே எங்கு தங்கினேன் தெரியுமா? ஆரூர் கணபதிப்பிள்ளை அவர்கள் வீட்டில்தான். தேரடிக்குப் பக்கத்திலே வசிக்கும் அவரைத் தெரியாதவர்கள் அங்கு இரார். ஏனெனில் கோவிலிலே தினசரி மூன்றுகாலப் பூசைக்கும் சென்று நடராஜப் பெருமான் திருமுன்னே தூபம் போடுங் கைங்கரியம் செய்துவருகின்ருர் அவர். குங்கிலியக்கலய நாயனரைப்பற்றி பெரிய புராணம் கூறுகிறதல்லவா? அவரை ஞாபகப்படுத்துகின்றது பிள்ளையவர்களின் வாழ்க்கையும் தொண்டும்.

அவருக்கு இப்போது வயது 71. மிகச் சுறுசுறுப்பாக இளைஞர்போலிருக்கின்ருர். இதன் இரகசியம் அவர் செய்துவரும் சிவபூசைதானும். குற்றங்கண்ட இடத்து தயவுதாட்சண்யமின்றி கண்டிக்கத் தவருர். அவரைக் கண்டாலே அங்கு பலருக்கு சிம்ம சொப்பனம். அவரைப்பற்றிய கதைகள் பலப்பல. திருமுறைகளைப் பரப்புவது அவரது வாழ்க்கையின் முக்கிய குறிக்கோள். சைவம் தழைக்க திருமுறைகளைப் பரப்பவேண்டுமென்று வற்புறுத்தினர்.

அவருடன் மாலையிலே இலக்கண சுவாமி எனும் ஸ்ரீமத் முத்துக்குமார தம்பிரான் சுவாமிகளின் சமாதியை தரிசிக்கச் சென்றேன். ஈழத்தில் அவதரித்த அப்பெரியார் சிதம்பரத்தில் அடக்கமாகி இரு நாடுகளையும் புனிதமாகப் பிணைத்து வருகின்ருர். அவரது சமாதி புத்தகசாலை முதலியவற்றின் கருமகர்த்தாக்களில் பிள்ளையவர்களுமொருவர். சமாதி, கோவில் கட்டப்பட ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. சிறப்பாக ஈழத்திலிருந்து செல்லும் அன்பர்கள் தரிசித்து வணங்கவேண்டிய இடம் அது.

அங்கு வணங்கிவிட்டுத் திரும்புகையில் ஒரு வீட்டுத் திண்ணையில் பல பள்ளிச் சிறுவர்களும் சிறுமிகளும் விளையாடிக்கொண்டிருந்தனர். அவர்களிடம் மெதுவாகப் பேச்சவிட்டு, ஏதாவது தேவாரம் பாடச் சொன்னேன். ஒருவருக்குக்கூடத் தெரியவில்லை. சினிமாப்பாட்டென்ருல் பாடுவார்களாம்! இலங்கையிலே தேவாரம் தெரியாத சைவப் பிள்ளைகள் கிடையாதென்றும், அரிவரி படிக்கும் குழந்தைக்கும் கூட சில தேவாரங்கள் தெரியுமென்றும் பிள்ளையவர்களிடம் பெருமையுடன் கூறினேன். பள்ளிக்கூடங்களில் சைவக் குழந்தைகளுக்கு சைவம கட்டாயமாகக் கற்பிக்கப்படுவதைப்பற்றிக் கூறியபோது, அவர் பாராட்டி, இவ்விதமே தமிழகத்திலும் செய்யவேண்டுமென்ருர்.

ஒரு "குட்டி யாழ்ப்பாணம்" அங்கிருப்பதைக் காண, மிக மகிழ்ச்சியாக இருந்தது. பெரியார் ஞானப்பிரகாசர் வெட்டிய பெரிய குளம் தண்ணீர் நிரம்பி பலருக்கும் பயன்படுகின்றது அங்கு பெரியபுராணம் பாடிய சேக்கிழாருக்கு யாழ்ப்பாணத்தவர் ஒரு கோவில் கட்டியிருக்கின்ருர்கள். தினசரி மூன்றுவேளை பூசை நடக்கின்றது. அன்று சேக்கிழார் குருபூசை. பகலில்

5-ம் பக்கம் பார்க்க

# தானிய விலை ஏற்றம் திட்டத்துக்கு அபாயமாகும்

## முதன் மந்திரிகள் மகாநாட்டில் சாஸ்திரி

புதுடில்லி, ஜூன் 25

நேற்று புதுடில்லியில் திரு. சுப்ரமண்யம் தலைமையில் நடைபெற்ற ராஜ்ய முதன்மந்திரிகள் மகாநாட்டில் பிரதமமந்திரி சாஸ்திரி பேசியபோது தானியக் கொள்வினை நிலையான கொள்கையாகிவிட வேண்டும் எனக் கூறினர்.

இதுவரை இல்லாத அளவில் தானிய விலைகள் ஏறிவிட்டன என்றும், இன்னும் ஏறிக் கொண்டிருக்கின்றன என்றும் இந்தநிலை நாட்டின் திட்டமிட்ட அபிவிருத்தி முயற்சிக்கு மிக அபாயமானதென்றும் சாஸ்திரி கூறினர்.

"நாட்டில் போதிய தானியக் கையிருப்பு இருக்கிறது. இப்போதுகூட அவற்றை வெளியிட்டு வர்த்தக சமூகத்தின் சவாலைச் சமாளிக்க முடியும். அதற்குமுன் விடுவிக்குமளவு கையிருபபு கிடைக்கும் உத்தரவாதம் பெற்றுக்கொள்ளவும் வேண்டும்" என சாஸ்திரி கூறினர்.

"இந்தத் தேவையை அமெரிக்காவும் பாகிஸ்தானும் பூர்த்தி செய்ய முன்வந்திருக்கின்றன. ஆகஸ்ட் மாத அறுவடையிலிருந்து அமெரிக்கா இந்தச் சப்ளையை அளிக்க முன்வந்திருப்பது பெரியகாரியம், பாகிஸ்தானுடன் 1 லட்சம் டன் அரிசிபெறும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட விரைவில் தூதுகோஷ்டி அங்கு செல்லவிருக்கிறது" என்றும் பிரதமர் கூறினர்.

திரு. சுப்ரமண்யம் இந்த மகாநாட்டை ஆரம்பித்துவைக்கையில் தாய்லாந்திலிருந்தும் அரிசி பெற ஏற்பாடு செய்யப்படவிருப்பதாய் கூறினர்.

ராஜ்ய முதன்மந்திரிகள் பின்பு உணவுவிலை ஏற்றம் பற்றி ஆலோசனை நடத்தினர். இன்றும் விவாதிப்பார்கள். விலைகளை உடனடியாகக் குறைக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என அவர்கள் ஒத்துக் கொண்டனர்.

# பாவேக்கு சுகம்

புதுடில்லி, ஜூன் 25

சுகவீனமுற்றிருந்த வினோபாபாவே இப்போது குணமடைந்துவிட்டார் என்றும், வழக்கம்போல் அவர் இனி நடவடிக்கை மேற்கொள்வார் என்றும் சர்வோதய அலுவலகத்திலிருந்து அறிவிக்கப்பட்டது.

## ம. பி. யில் மூன்று பல்கலைக்கழகம்

புதுடில்லி, ஜூன் 25

மத்தியபிரதேசத்தில் அடுத்த மாதம் முதல் 3 புதிய பல்கலைக்கழகங்கள் இயங்க ஆரம்பிக்கும் என அறிவிக்கப்படுகிறது.

# ஜூலை முதல் வாரம் திம்மையா பதவி ஏற்பார்

## சைப்ரஸில் ஐக்கியநாட்டு ராணுவ தளபதியாக

புதுடில்லி, ஜூன் 25

அடுத்த மாதம் முதல் வாரம் தாம் சைப்ரஸிலுள்ள ஐ. நா. படைகளின் தளகர்த்தராகப் பதவி ஏற்கப்போவதாய் ஜெனரல் கே. எஸ். திம்மையா கூறினர்.

தற்போதைய தளபதி லெப்டினன்ட் ஜெனரல் கியானியின் பதவிக் காலம் அடுத்த சனிக்கிழமை முடிவடைகிறது.

ஜெனரல் திம்மையா வருகிற 30-ம் திகதி தாம் நியுயோர்க் சென்று ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்டைச் சந்திக்கப்போவதாய்க் கூறினர்.

துருக்கி பிரதமர் திரு. இஸ்மத் இனேனு நேற்று நியுயோர்க்கில் யுதாண்டைச் சந்தித்தார். அதற்கு முன் அவர் வாஷிங்டனில் ஜனாதிபதி ஜோன்ஸனுடன் சைப்ரஸ் நிலைமைபற்றி விவாதித்தார்.

# நேருவின் வாழ்க்கை பற்றி சினிமாப் படங்கள்

## நினைவு அகலாதிருக்க இன்னும் பல திட்டங்கள்

புதுடில்லி, ஜூன் 25

ரேடியோ, திரைப்படம், விளம்பரம் ஆகியவற்றின் மூலம் காலஞ்சென்ற நேருவின் நினைவு நிலைத்திருக்கும் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

நேரு ஆங்கிலத்தில் ஒலிபரப்பிய உரைகளில் தேர்ந்தெடுத்தபகுதிகள், அவரது உயிலிலிருந்து சில பகுதிகள் ஆகியவற்றை அகில இந்திய வானொலி ரிக்கார்டுகளாக்கும்.

அவர் கலந்துகொண்ட குழந்தைகளுக்கான விசேஷ நிகழ்ச்சிகளும் இவ்வகையில் இடம்பெறும்,

நேருஜியின் பிறந்ததினமான நவம்பர் 14-ம்திகதி, இறந்த தினமான மே 27-ம் திகதி ஆகிய இரு தினங்களையும் ஆகாசவாணி அனுசரிக்கும்

நேருவின் பிறப்புமுதல் இறப்புவரையுள்ள திரைப்படம் தயாரிக்கப்படுவதற்காக, இப்போது தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன.

அவரது வாழ்க்கை, எழுத்துக்கள்பற்றி நிறைய புத்தகங்கள் வெளியிடப்படும். அவரது பிற்காலத்தைச் சித்திரிக்கும் பல்வேறு அல்பங்கள், உயிலின் பகுதிகள், நவபாரதத்தின் சிற்பியாக அவரைச் சித்தரிக்கும் புகைப்படப் பொருட்காட்சிகள் ஆகியன வெளியாகும்.

நேற்று அந்தமான்-நிக்கோபார் தீவிலுள்ள 'போர்ட்பிளயர்' துறைமுகத்துக்குவெளியே, நேரு அஸ்தியின் ஒருபகுதி கடலில் கரைக்கப்பட்டது.

## சஞ்சீவையா

பெல்கிரேட், ஜூன் 25

யூகோஸ்லேவியாவின் அழைப்புக்கிணங்க அங்கு சென்றிருக்கும் இந்திய தொழிலாளர் நல மந்திரி திரு. சஞ்சீவையா அந்த நாட்டுப் பிரதமரையும் இதர மந்திரிகளையும் சந்தித்துப் பேசினர். வரும் வழியில் அவர் லண்டன், ரோம், கெய்ரோ ஆகிய நகரங்களுக்குச் செல்வார்.

## ஸ்ரீநகரில் கைகலப்பு

ஸ்ரீநகர், ஜூன் 25

மாறுபட்ட அரசியல் கட்சி ஆதரவாளர்களுக்கிடையே இங்கு நடைபெற்ற கைகலப்பில் பொலிசார் தடியடிப்பிரயோகம் செய்ததால் குறைந்தது 12 பேர் காயமடைந்தனர். ஷேக்அப்துல்லா ஆதரவாளர்களும் புதிதாக நிறுவப்பட்ட அவாமி செயல் கமிட்டி கட்சி ஆதரவாளர்களும் இந்தக் கைகலப்பில் ஈடுபட்டனர்

# கொச்சியில் கப்பல் கட்டும் தளம் துரிதமடைகிறது

## தலா 75,000 டன் கொண்ட கப்பல்களும் அங்கு உருவாகும்

புதுடில்லி, ஜூன் 25

கொச்சியில் அரசாங்கக் கப்பல் கட்டும்கூடம் அமைப்பதற்காக ஜப்பானுக்கும் இந்தியாவுக்குமிடையே ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவிருக்கிறது.

ஆரம்பத்தில் தலா 15,000 டன்கள் கொண்ட இருகப்பல்களும், தலா 30,000 டன்கள் கொண்ட இருகப்பல்களும் கொச்சியில் கட்டப்படும். பின் ஓராண்டில் மொத்தம் 125,000 டன்கள் நிறையுள்ள கப்பல்கள் கட்டப்படும். இறுதியில் தலா 76,000 டன் நிறையுள்ள பெரிய கப்பல்களைக் கட்டும் நிலையில் கொச்சி கப்பல் கட்டும் தளம் விளங்கும்.

ஜப்பானும் இந்தியாவும் சேர்ந்து கூட்டு உல்லாச பிரயாணத்திட்டம் ஒன்றை மேற்கொள்ளும் ஒப்பந்தமும் கைச்சாத்திடப்படவிருக்கிறது.

## சுவர்ண்சிங்

புதுடில்லி, ஜூன் 25

பஞ்சாபுக்கு புதிய முதல்மந்திரி ஒருவரைத் தெரிவுசெய்வதுபற்றி ஆலோசிக்க சண்டிகார் சென்றிருந்த சர்தார் சுவண்சிங் நேற்று பிரதமர் சாஸ்திரியையும், காமராஜரையும் சந்தித்தார். மீண்டும் வருகிற சனிக்கிழமை அவர் சண்டிகார் செல்லவிருக்கிறர்.

## கென்யாட்டா

நைரோபி, ஜூன் 25

லியப்போல்ட்விலியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் அங்கோலா சுதந்திர அரசாங்கத்தை கென்யா அங்கீகரித்திருப்பதாய் பிரதமர் கென்யாட்டா அறிவித்தார்.

# அமெரிக்கா மேற்கொண்ட போர்க் கோலம்!

## டெய்லர் நியமனம் பற்றி பிரிட்டிஷ் பத்திரிகைகள்

லண்டன், ஜூன் 25

தென் வியட்னாமில் ஜெனரல் மாக்ஸ்வெல் டி. டெய்லர் அமெரிக்க ஸ்தானிகராக நியமிக்கப்பட்டிருப்பது தென்கிழக்காசியாவில் கம்யூனிஸ்ட் ஆக்கிரமிப்பைத் தடுப்பதில் அமெரிக்கா எவ்வளவு உறுதியுடனிருக்கிறது என்பதைப் புலப்படுத்துவதாக பிரிட்டிஷ் பத்திரிகைகள் கூறியிருக்கின்றன.

கன்சர்வேட்டிப் பத்திரிகை 'டெய்லி மெயில்' "அரசியல்வாதி வெளியேற்றம்" போர்வீரர் உள்ளே வருகிறர். பீகிங்குக்கு இந்தச் செய்தி உலைத்திருக்கும்" என அது எழுதியிருக்கிறது.

கம்யூனிஸ்ட் பத்திரிகை "டெய்லி ஏர்க்கர்" இச் செய்தியை 5 கலத்தில் பிரதான தலைப்பாகப் பிரசுரித்திருக்கிறது.

சீனவுடன் யுத்தத்தில் ஈடுபட அமெரிக்கா முஸ்தீபு செய்வதை மீண்டும் இது உலகுக்கு உணர்த்துகிறது' எனவும் அப்பத்திரிகை கூறுகிறது.

தென் கிழக்காசியாவில் மூளும் எந்த யுத்தமும் உலகத்தையே அதில் ஆழ்த்திவிடும் என்றும் அது கூறியுள்ளது.

## தலைமை ஆசிரியர் மகாநாடு

யாழ்ப்பாணம், வெள்ளி

வடஇலங்கைத் தமிழாசிரியர் சங்க ஆதரவில் சிங்களத்தில் தேர்ச்சி பெருத தலைமையாசிரியர்களின் சம்பளப்படியேற்றத்தை 1-10-64-ல் தடைசெய்யும் சுற்று நிருபத்தைத் தவிர்க்கும்படி வற்புறுத்தி ஆவன செய்வதற்காக எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மு. ப. 10மணிக்கு யாழ். பாரதிபாஷிய வித்தியாசாலையில் ஒரு மகாநாடு நடைபெறவிருக்கிறது.

## 'உங்கள் ஒத்துழைப்பு வேண்டும்'

கொழும்பு, வியாழன்

நிதிமந்திரி திரு. என். எம். பெரேரா இலங்கை இறக்குமதி ஏற்றுமதியாளர் சங்கத்துக்கு அவர்களது ஒத்துழைப்பிலேயே தாம் வெற்றிகரமாகக் கடமையாற்றுவது தங்கியுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். பெரேரா பதவியேற்றதை வாழ்த்தி சங்கத்தலைவர் திரு. ஜே. ஒலிவர் பெரேரா எழுதியதற்குப் பதிலளிக்கும்போதே பெரேரா இவ்வாறு குறிப்பிட்டார்.

## பெற்ரேல் பெற அடையாளட பத்திரம்

கொழும்பு, வியாழன்

அரசாங்க, பெட்ரோல்பெறும் பத்திரங்களை கள்ளக் கையெழுத்திட்டு ஏராளமான பெற்ரோல் நாட்டின் பல பாகத்திலும் பெறப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டதன் விளைவாக பெற்ரோல் பெறுவதற்காக அடையாளப்பத்திரம் விநியோகிப்பதுபற்றி ஆராயப்படுகிறது. விசேஷ பத்திரத்தில் இந்த அடையாளப் பத்திரம் தயாரிக்கப்படும். பெற்ரோல் பெற அருகதை உடையவரின் புகைப்படமும் அடையாளப்பத்திரத்தில் இடம்பெறும்.

# "இந்தோனேஷிய ஆக்ரமிப்பு சமாதானத்துக்கு ஆபத்தானது"

## பிரிட்டிஷ் தொழிற்கட்சி தலைவர்கள் கண்டனம்

லண்டன், ஜூன் 25

மலேஷியாவுக்கெதிரான தற்போதைய கொள்கை சமாதானத்துக்கு உண்மையான அபாயம் என்றும் இந்த முழுவிஷயமும் ஐ. நா.வில் கிளப்பப்பட வேண்டும் என்றும் பிரிட்டிஷ் தொழிற்கட்சியினர் அறிவித்தனர்.

பாதுகாப்பு மந்திரி திரு தோர்னிகிராப்ட்காமன்ஸ்சபையில் இதற்குப் பதிலளிக்கையில் இந்தவிஷயம் வெளிநாட்டு மந்திரி பட்லரையும், மலேஷிய அரசாங்கத்தையும் பொறுத்தது எனக் கூறினர்.

இந்தோனேஷிய கொரில்லாக்கள் சரவாக்கில் தாக்குதல் நடத்தியதின் பயனுய் 5 கூர்க்காக்கள் கொல்லப்பட்டனர் என திரு தோர்னிகிராப்ட் சபையில் அறிவித்தபோது தொழிற்கட்சியைச் சேர்ந்த திரு. டெனிஸ்ஹீலி, இப்பிரச்னையை ஐ. நா.வில் சமர்ப்பிக்கும்படி வற்புறுத்தினர்.

"டோக்கியோ பேச்சுகள் தோல்வியுற்றது குறித்து அனைவரும் துக்கமடைந்தனர். ஆனல் இதற்கு இந்தோனேஷியரே காரணம், அதுமட்டுமன்றி ஒரு நட்பு நாட்டுக்கெதிராக அவர்கள் ஐ. நா. சாஸனத்துக்குமாறுய் அயுதத்தாக்குதலில் மீண்டும் ஈடுபட்டது தவறு" என்றும் திரு. ஹீலி கூறினர்.

## தாஸ் அறிக்கைமீது நந்தா ஆலோசனை

புதுடில்லி, ஜூன் 26

தாஸ் கமிஷன் அறிக்கை குறித்து உள்நாட்டு மந்திரி திரு. நந்தாவும், மற்றும் பல அதிகாரிகளும் நேற்று ஆலோசனை நடத்தினர்கள். ஊழலில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது அரசியல் சட்டத்தில் நடவடிக்கை எடுப்பதுபற்றியும் அவர்கள் ஆலோசித்ததாகத் தெரிகிறது.

## தென்னுபிரிக்கா பற்றி யுதாண்ட்

நியுயோர்க், ஜூன் 25

தென்னுபிரிக்காமீது நடவடிக்கை எடுப்பது குறித்து ஆராய்ச்சிநடத்த நிபுணர்களை நியமிக்குமாறு 11 பாதுகாப்பு சபை அங்கத்தினர்களையும் யுதாண்ட் கேட்டுக்கொண்டிருக்கிறர்.

இந்தியாவைச்சேர்ந்த திரு. அரவிந்த வெள்ரேடியை, ஆராய்ச்சிப்பிரிவுக்குத் தம்சொந்தப் பிரதிநிதியாக யுதாண்ட் நியமித்திருக்கிறர்.

## இன்னிங்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் பரமேஸ்வரா கல்லூரிக்குமிடையில் பரமேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் மத்திய கல்லூரி பரமேஸ்வரா கல்லூரியை ஒரு இன்னிங்ஸாலும் 6 விக்கட்டுக்களாலும் தோற்கடித்தது.

மத்திய கல்லூரி முதலாவது ஆட்டத்தில் நான்கு விக்கட் நஷ்டத்திற்கு 183 ஓட்டங்களை எடுத்து தங்கள் ஆட்டத்தை நிறுத்தி விட்டார்கள். மத்திய கல்லூரியைச் சேர்ந்த கங்காத்ரன் 58 ஓட்டங்களையும, மனேகரன் தனது ஆட்டத்தை இழக்காமல் 48 ஓட்டங்களையும், நடராசா 28 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பரமேஸ்வராக் கல்லூரி தனது முதலாவது ஆட்டத்தில் 53 ஓட்டங்களையும், இரண்டாவது ஆட்டத்தில் 103 ஓட்டங்களையும் பெற்றது. பரமேஸ்வராக் கல்லூரியைச் சேர்ந்த செல்வச்சந்திரன் 42 ஓட்டங்களைப் பெற்ருர்.

மத்திய கல்லூரியைச் சேர்ந்த சிவசோதி 25 ஓட்டங்களை கொடுத்து 4 விக்கட்டுகளையும், நடராசா 9 ஓட்டங்களை கொடுத்து 3 விககட்டுக்களையும் பெற்றனர்.

## கடமையுடன் காலமானர்

ஆரணி, ஜூன் 25

ஆரணி பள்ளிக்கூட வீதியில் ஒரு நோயாளிக்கு ஏற்பட்ட கட்டியை ஆப்ரேஷன் செய்து கட்டுக்களும் கட்டி முடித்துவிட்டு, எழுந்துநின்ற ரணவைத்திய நிபுணர் ராஜூ உடனே கீழே விழுந்து மாரடைப்பால் மாண்டார்.

## "அழியாத இலக்கியங்கள்"

யாழ்ப்பாணம், புதன்

"பழந்தமிழ் நாட்டிற் பல கடற்கோள்களும் வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டுப் பற்பல நாசங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. ஆனால் தமிழ் மக்கள் தம் உயர் இலக்கியங்களை கண் போற் காத்து இன்று எமக்குத்தந்துள்ளனர். கீழ்த்தர இலக்கியங்கள் தாமாகவே அழிந்து போக, உயர்ந்த இலக்கியங்கள் என்றும் உயிர்வாழ்கின்றன. கம்பராமாயணம், திருக்குறள் போன்றவை இத்தகைய உயர்ந்த இலக்கியங்களாகும். கம்பன் தான்பெற்ற இலக்கிய இன்பத்தையும், தனக்கிருந்த வடமொழி இலக்கிய அனுபவத்தையும் கம்பராமாயணம் என்ற பெரும் காவியமாக வெளியிட்டார்." என யாழ். திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தினர் இலங்கைக் கம்பன் கழகத்தின் ஆதரவுடன் தம் கல்லூரி மண்டபத்தில் நடாத்திய கூட்டமொன்றில் பேசிய, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. வே. சிவராமலிங்கம் குறிப்பிட்டார். ஆசிரியர் திரு. பொ. இராமசாமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் செல்வன் க. தங்கவேலு வரவேற்புரை நிகழ்த்தினர்.

---

## நகரசபைகளின் பதவிக்காலம்

கொழும்பு, வியாழன்

நகரசபைகளின் பதவிக்காலத்தை மூன்று வருடங்களிலிருந்து ஐந்து வருடங்களாக அதிகரிக்கவேண்டுமென்ற தீர்மானம் எதிர்வரும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெறவிருக்கும் அகில இலங்கை நகரசபைகள் மகாநாட்டில் கொண்டுவரப் படவிருக்கிறது. மூன்று வருடங்கள் அபிவிருத்தி வேலைகளை திட்டமிட்டு நடத்த போதாது என அந்த தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

## பல்லவராயன்கட்டு கிராமசபை தேர்தல் முடிவுகள்

யாழ்ப்பாணம், வியாழன்

பல்லவராயன்கட்டு கிராம சபை தேர்தல் முடிவுகள்:

2-ம் வட்டாரம்: விஜசித்தம்பி அம்பலவாணர், 3-ம் வட்டாரம்: கதிரவேலு குமாரசாமி, 4-ம் வட்டாரம்: பெருமாள் செல்லன், 5-ம் வட்டாரம்: பேதுரு சந்தியாபிள்ளை, 6-ம் வட்டாரம்: வெலிச்சோர் சீமான், 7-ம் வட்டாரம்: நல்லையா விஜசித்தம்பி.

1-ம் வட்டார அங்கத்தவர் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

---

## வானொலி நிகழ்ச்சிகள்

### வெள்ளி 26-6-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 2-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 காலைக்கதிர், 6-55 இஸ்லாமியநற்சிந்தனை — எம். எம். இப்ருகீம் லெப்பை, 7-15 தோத்திரப்பாடல்கள் — ஆர். சோமநாதன், 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதம்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாகஸ்வரம்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 ஞானாஞ்சலி, 7-15 பாட்டு — முத்துலக்ஷ்மி கைலாசநாதன், 7-30 நேயர் விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 புத்தக விமர்சனம், 9-30 நேயர்விருப்பம், 10-15 தேர்ந்த இசை.

## ஈழத்திராவிடர் முன்னணி கூட்டம்

பம்பலப்பிட்டி, வியாழன்

ஈழத்திராவிடர் முன்னணியின் ஆட்சிப் பொதுக்குழுக் கூட்டம் பொதுச் செயலாளர் திரு. எம். ஏ. மணிமாறன் தலைமையில் நடைபெற்றபோது தலைவரின் தலைமையுரைக்குப் பின்னர் நடப்பு ஆண்டிற்கான அலுவலர்கள் தேர்வு நடந்தது. மீண்டும் இவ்வாண்டின் பொதுச் செயலாளராக திரு. எம். ஏ. மணிமாறன் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். மற்றும் தலைமை நிலையச் செயலாளராக திரு. கம்பளைதாசனும் தலைமைப் பொருளாளராக ஜனாப் நிசாரும் இன்னும் ஐந்து ஆட்சிக்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இவ்வாண்டின் இறுதியில் பேரறிஞர் இங்கர்சாலின் நினைவு விழாவை கொண்டாடுவதென்றும், தமிழர்களின் நியாயமான அடிப்படை உரிமைகளை வழங்குவதில் நீதியுடனும் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமலும் நடந்து கொள்ளுமாறு அரசினரை வேண்டிக்கொள்வதென்றும்; ஒவ்வொரு ஆண்டும் சிறந்த நாடகத்திற்கும் நாடகக் கலைஞர்கட்கும் பரிசுகள் வழங்குவதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

## எதிரிகள் விடுதலை

ஊர்காவற்றுறை, வியாழன்

சரவணை தெற்கு குடியேற்றத் திட்டப் பகுதியில் வசிக்கும் சூரியவத்தை வாசியான அந்தோனி என்பவருக்குக் காயம் விளைவித்ததாக அதே இடத்தைச் சேர்ந்த வேதநாயகம், பொன்னுக்கோன், சவிரி ஆகிய மூவர் மீதும் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு சென்ற வியாழக்கிழமை ஊர்காவற்றுறை மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் நீதிபதி திரு. அரசுவால்டன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிரிகள் தரப்பில் புரக்டர் எஸ். வி. கதிரவேலு ஆஜரானர். வழக்காளி தரப்பில் திரு. ஆர். விசுவநாதன் ஏற்பட்டிருந்தார்.

ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலை அதிகாரி டாக்டர் எஸ். கந்தசாமி, திருமதி அன்ரனியம்மா, கனகு ஆகியோர் சாட்சியமளித்தனர்.

விசாரணையின் பின் நீதிபதி எதிரிகளை விடுதலை செய்தார்.

---

## பெரியார் நினைவு விழா

கொழும்பு, வியா

"இல்வாழ்வின் உயிர் பதிபக்தி. பாடசாலை வாழ்வின் உயிர் குருபக்தி. தமிழின் நெறி அன்புநெறி என்பதையெல்லாம் எமக்கு எடுத்துரைக்கும் திருக்குறளை நாம் மறக்கவே கூடாது - முடியாது" என்று உனுப்பிட்டி அரசினர் இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்ற பெரியோர் நினைவு விழாவில் பேசுகையில் திரு. க. முத்துவேலு கூறினர். வள்ளுவர், பாரதிதாஸன், நேரு ஆகியோரது நினைவுக்கு அஞ்சலி செலுத்துவதற்காகவே இந்த விழா எடுக்கப்பட்டது.

கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய திரு. பொ. நடராஜா பேசுகையில், நேருவின் மரணம் உலகிற்கு ஏற்பட்டுள்ள பெரிய நஷ்டமென்றும், மாலுமி இல்லாக் கப்பலாய் இந்தியா சஞ்சலப்படுகிறதென்றும் கூறினர்.

---

## சேவைநலம் பாராட்டு

பருத்தித்துறை, வியாழன்

திருஇருதயக்கல்லூரி ஆசிரியராகக் கடமையாற்றி தமது 37 வருட ஆசிரியசேவையினின்றும் இளைப்பாறிய பேராசிரியர் திரு. யே. எட்வேட்டின் சேவையைப் பாராட்டுமுகமாக வடமராட்சி ஆசிரியர் சங்கம் தேநீர் விருந்தொன்றளித்துக் கௌரவித்தது.

## நுணாவிலில் திருடா தொல்லை

சாவகச்சேரி, வியா

நுணாவில் மேற்குப் பகுதியில் திருடர் நடமாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதைத் தொடர்ந்து கிராமசேவையாளர் திரு. எஸ். கே. சின்னத்தம்பி, திரு. ரி. இரத்தினராஜாவின் அனுசரணையுடனும் பொலிசாரின் ஒத்துழைப்புடனும் தொண்டர் படை அமைத்து இரவில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். ஆடு களவெடுத்த ஒரு வாலிபர் பிடிபட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

---

## சங்கிலி திருடினராம்

ஊர்காவற்றுறை, வியா

காரைநகர் கிழக்கு ரோட்டில் வசிக்கும் இளைஞரான வேலுப்பிள்ளை என்பவர் அதே ஊரைச் சேர்ந்த சுந்தரம்மா வீட்டில் பட்டப்பகலில் ஆறு பவுண் தங்கச் சங்கிலியைக் களவாடியதாகக் குற்றம்சாட்டி ஊர்காவற்றுறைப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு சென்ற வியாழக்கிழமை நீதிபதி திரு. அரசுவால்டன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த வேலுப்பிள்ளை நீதிபதிமுன் ஆஜரானர். நீதிபதி எதிரியை 750 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து மேல் விசாரணை ஒத்திவைத்தார்.

---

## 25 கோடி ரூபா வெளிநாட்டு உதவி

கொழும்பு, வியாழன்

1964-65-ம் ஆண்டில் இலங்கைக்கு 2500 லட்சம் ரூபா வெளிநாட்டு உதவி கிடைக்கும் என உத்தியோக பூர்வமான வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது. இவ்விதம் எதிர்வரும் நிதியாண்டில் 2500 லட்சம் ரூபா வெளிநாட்டு உதவி கிடைக்குமானல் இது வரை கிடைத்து வந்த வெளிநாட்டு உதவியை விட இதுவே மிகக் கூடியதாக இருக்கும். 1963-64-ம் நிதியாண்டில் வெளிநாடுகளிலிருந்து கிடைத்த உதவி தக்க முறையில் 2000 லட்சம் ரூபா உபயோகிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட 63-64-ம் நிதியாண்டிற்கு முன்னர் அபிவிருத்தி வேலைகளுக்கென பட்ஜட்டில் குறிப்பிடப்பட்ட தொகைகளைவிட மிகவும் குறைந்த அளவே செலவிடப் பட்டுவந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. உதாரணமாக 1962-63 நிதியாண்டில் அபிவிருத்தி வேலைகளுக்கென பட்ஜட்டில் 1750 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டபொழுதிலும் 630 லட்சமே உபயோகப் பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1964-65-ம் நிதியாண்டில் கிடைக்கக் கூடிய வெளிநாட்டு உதவியில் ஆஸ்திரேலியா, பிரிட்டன், கனடா, சீன ஆகிய நாடுகள் பெருந் தொகைகளை உதவ முன் வந்துள்ளன.

---

## அனலைதீவு பிள்ளையார் கோவில் உற்சவம்

அனலைதீவு, வியாழன்

அனலைதீவு பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் அடுத்த மாதம் 6 ம் திகதி ஆரம்பமாகிறது. 14 ம் திகதி ரதோற்சவமும் 15 ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

---

## மின்சார சுப்றீண்டடன்ட் இடமாற்றம்

கொடிகாமம், வியாழன்

சாவகச்சேரியில் மின்சார சுப்றீண்டனக கடமையாற்றிய திரு. கிறிஸ்டீன் பதவி உயர்வு பெற்று அடுத்தமாதம் 1-ம் திகதி கல்கிசைக்கு மாற்றலாகி செல்கின்றார்.

# பொருளாதாரத்தை வளர்ப்பவரே உயர்ந்த சாதியினர்!

## சாதிகள் பற்றி நிரந்தரக் காரியதரிசி தரும் புதிய விளக்கம்

மாவிட்டபுரம், வியாழன்

"நாட்டில் இருவகைச் சாதியினரே இருக்க முடியும் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய உழைப்பவர்கள் ஒருசாதி; அவர்கள் உற்பத்தி செய்யும் பொருளாதாரத்தை நம்பி "காற்சட்டை" உத்தியோகங்கள் பார்ப்பவர்கள் மறுசாதி. முதலாமவர் மதிப்புக்குரியவர், உயர்ந்த சாதியினர். இரண்டாமவர்; முதலாமவரில் தங்கியிருக்கும் கீழ் சாதியினர். எனவே பொருளாதாரத்தை பெருக்க நாம் எல்லோரும் முன்வந்து சாதியில் உயர்ந்தவர்களாகி, நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும்".

இவ்வாறு தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி நிறுவியவர் நினைவுநாள்விழாவில் பேசுகையில் சுகாதார வீடமைப்பு அமைச்சின் நிரந்தரக்காரிய தரிசி திரு. கு. பாலசிங்கம் குறிப்பிட்டார்.

அவர் தமது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது:

துரிதமாக முன்னேறி வரும் உலகத்தில் வாழும் நாம் கடும் உழைப்பும் முயற்சியுமுள்ளவர்களாக இருந்தாலே நாம் வாழ்க்கையில் வெற்றி அடைய முடியும். எமது நாளாந்த வாழ்க்கையில் உபயோகப்படும் பொருட்களுக்கே வெளிநாடுகளை நம்பி வாழும் கேவலமான நிலையில் நாம் இருக்கின்றோம். பொருளாதார அபிவிருத்திக்கான உற்பத்தி வேலைகளில் ஈடுபடுவதைவிட "மதிப்புக்குரிய" உத்தியோகங்களையே நம்மில் பலரும் இன்னும் எதிபார்த்துக்கொண்டிருக்கிறோம். சுதந்திரத்தின் உரிய தன்மை இன்னும் நமது மத்தியில் தெரியவில்லை.

நாட்டில் உள்ள இயற்கை வளத்தை கிடைக்கக்கூடிய மூலதனத்தை செலவிட்டு முயற்சியுடன் உழைத்தலே பொருளாதார அபிவிருத்தியாகும். நாட்டின் செல்வத்தை பெருக்குவதே நமது நோக்காக இருக்கவேண்டும். எனவே நாட்டின் செல்வத்தைப் பெருக்கும் வகையில் பொருளாதார அபிவிருத்தியில் ஈடுபடுபவர்களையே நாட்டின் உயர்ந்த சாதியினராக மதிக்கவேண்டும். மற்றெல்லோரும், அவர்கள் எவ்வளவு முக்கியமானவர்களாகவோ அல்லது தேவையானவர்களாகவோ இருந்தாலும் அவர்கள் முற்குறிப்பிட்டவர்கள் பெருக்கும் செல்வத்தை நம்பி அதைப் பங்குபோட்டுக்கொள்ளும் கீழினத்தினரானவர். மேல் சாதியினரை நம்பி வாழும் புல்லுருவிகளாக கீழ்சாதியினர் இருக்கின்றனர். அவர்கள் உழைக்கததவறின் இவர்கள் வாழ்க்கையில் வேரோடு சாய்ந்துவிடவேண்டியவர்களாகவே இருக்கின்றனர்."

கலாநிதி சு. வித்தியானந்தன் நிறுவியவர் தினப்பேருரை நிகழ்த்துகையில் கூறியதாவது:-

"இன்றைய தமிழரின் நிலை மிகவும் பரிதாபகரமானது. பெருக்கெடுத்த கடலிலே தத்தளிக்கும் மாலுமிகள் போலக் குழப்பமான ஒரு சூழலிலே தத்தளிக்கின்றனர். தமிழர் ஏக்கத்தினுலும் ஏமாற்றத்தினுலும் பிடிக்கப்பட்டு செயலாற்றத் தெரியாது திண்டாடுகின்றனர். கொடியசட்டங்களினுலும், அகங்காரம் பிடித்த அரசாங்கத்தினுலும் அமுக்கப்பட்டு அடிமைத்தளையை எடுத்தெறிய வழியில்லாது வாடுகின்றனர். தட்டிக்கேட்க ஆள் இல்லாததினல் அட்டூழியங்கள் நாளுக்கு நாள் கூடுதலாக இழைக்கப்படுகின்றன. அரசியல் துறையிலே தமிழ் இனம் இன்று பலமற்ற இனமாக, துரும்பாகக் கருதப்படும் ஓர் இனமாக வந்துவிட்டது.

இன்று உயர்தரக் கல்வி கற்று பல்கலைக்கழகப் பட்டமும் பெற்றிருக்கும் தமிழ் இளைஞரின் நிலை கவலைக்குரியது. கடந்த சில ஆண்டுகளாகக் கலைமாணிப் பட்டங்களோடு இலங்கைப் பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேறிய தமிழ் இளைஞர்களுக்கு இன்னும் உத்தியோகம் கிடைக்கவில்லை. சென்ற ஆண்டு பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானப் பட்டம் பெற்றவர்களிற்கூடப் பலர் இன்னும் தெருத்தெருவாக வேலைதேடி அலைகின்றனர். இவற்றைப்பற்றிச் சிந்திப்பார் யார்? உள்ளம் ஒடுங்கி, உற்சாகம் ஒழிந்து தன்னம்பிக்கை அற்று வாழ்க்கையில் வெறுப்புக்கொண்டிருக்கும் இளைஞரின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகின்றது. இதுகுறித்து நாம் விழிப்பாக இருத்தல் வேண்டும். நடப்பது நடக்கட்டுமே என்ற மலட்டு வேதாந்தம் வேண்டாம்.

திரு. துரையப்பாவை கூட்டு மேதாவி எனலாம். எமது நாட்டுப் பழக்கவழக்கங்கள், சமய வழிபாட்டு முறைகள் பேணப்படவேண்டும்; செந்தமிழும் வேண்டும். ஆங்கிலமும் வேண்டுமென்ற. பரந்த கருத்துக்களைப் பரப்பியவர் அவர். அன்னருடைய தொண்டு நமக்கு முன்மாதிரியாக அமைந்திருக்கின்றது.

விழாவில் செல்வி சித்திரலேகா கந்தையா வரவேற்புரை நிகழ்த்தினர். டாக்டர் கே. கதிர்காமசேகரம் நன்றியுரை கூறினர். திருமதி கு. பாலசிங்கம் பரிசில்கள் வழங்கினர். கல்லூரி மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

---

## 'எமது முன்னேற்றம் கைத்தொழில்களில் இருக்கிறது'

அக்கரைப்பற்று, வியாழன்

"இன்றுள்ள சூழ்நிலையில் கைத்தொழில்களில் ஒவ்வொருவரும் நல்ல ஆர்வமும் அக்கறையும் கொள்ளவேண்டும். இதில்தான் எமது எதிர்காலம் தங்கியிருக்கிறதென்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும் என்பதையும் இவ்வேளையில் சொல்லிவைக்கவிரும்புகிறேன். இந்த காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் பொருட்களைக் கவனிக்கும் பட்சத்தில் இக்கிராமத்தில் உள்ள மக்களுடைய திறமை அப்படியே புலனுகிறது. இவர்களின் திறமைகளை வெளிப்படுத்துவதற்கும், ஊக்குவிப்பதற்கும் இதுபோன்ற காட்சிகளை பல்வேறு சங்கங்களும், இயக்கங்களும் இடையிடையே நடத்தவேண்டும். இது எமது எதிர்கால சந்ததியினருக்கு நாம் செய்துவைக்கும் ஒரு தேசிய சேவையாக அமையும்." இவ்வாறு அக்கரைப்பற்று விபுலானந்தசபை பாரதி மணிமண்டபத்தில் ஒழுங்கு செய்த தையல் சித்திர கைப்பணிப் பொருட்காட்சியை அக்கரைப்பற்றுப் பிரிவுக் காரியாதிகாரி திரு. எஸ். எம். தியோபிளஸ் கடந்த சனிக்கிழமை சம்பிரதாய முறைப்படி குத்துவிளக்கேற்றி திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

---

## "பாராளுமன்றத்தைக் கூட்டுக"

கொழும்பு, வியாழன்

சுதந்திர ஞாபகார்த்த மண்டபத்தில் ஜூலை 2-ம் திகதி காலை 10 பத்துமணிக்கு பாராளுமன்றத்தைக் கூட்டும்படி கவர்னர் ஜெனரல் விசேஷ வர்த்தமானியில் பிரகடனஞ் செய்துள்ளார். முன்னர் ஜூலை மாதம் 10-ம் திகதிதான் பாராளுமன்றம் கூடுவதாகஇருந்தது.

பருத்தித்துறை

# மெதடிஸ்த மகளிர் கல்லூரி விளையாட்டுப் போட்டி முடிவுகள்

பருத்தித்துறை, வியா.

பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டிகளில் பல்வேறு விளையாட்டுக்களிலும் முதல் மூன்று இடங்களையும் பெற்று வெற்றியீட்டிய மாணவிகள் விபரம்:-

நீளம்பாய்தல் (மேற்பிரிவு):- சரோஜா ஞானபூபதி, கமலேஸ்வரி சுப்பிரமணியம், இரத்தினசோதி சிதம்பரப்பிள்ளை.

(மத்தியபிரிவு):- இந்திராணி கனகசபை, சாந்தமலர் வைரமுத்து, ஜெயந்தி முத்துத்தம்பி

கீழ்ப்பிரிவு:- அல்லிமாலை தங்கராசா, இராசேஸ்வரி சின்னத்துரை, பூலோகசுந்தரி இராமலிங்கம்.

பாரம் எறிதல் (மேற்பிரிவு):- கமலாதேவி சேதுபதி, பத்மினி புஷ்பராணி, புஷ்பராணி வேலுப்பிள்ளை.

மத்திய பிரிவு:- பெண்டிக்கம்மா பாக்கியநாதன், சர்வாங்கநாயகி ஜெயரட்ணம், பூபதி அப்பாத்துரை.

கிறிக்கற் பந்தெறிதல் (கீழ்ப்பிரிவு):- தர்மபூபதி கணபதிப்பிள்ளை, இளம்செல்வி வைத்தியலிங்கம், ஞானேசம்மா வேலும்மயிலும்.

உயரம்பாய்தல் (மேற்பிரிவு)- ஞானேஸ்வரி செல்லத்துரை, மங்களேஸ்வரி கந்தசாமி, ஜெயலட்சுமி இராசையா,

மத்திய பிரிவு:- கமலேஸ்வரி குமார், சாந்தமலர் லவரமுத்து, சரோஜினிதேவி சிவகுரு.

பரிதிவட்டம் (மத்தியபிரிவு)- சர்வாங்கநாயகி, ஜெயரட்ணம், சாவித்திரி அருணசலம், சிவசோதி கந்தசாமி.

ஈட்டி வீசல் (மத்திய பிரிவு):- குலஞானநிதி நடேசன், சதீஸ்வரி விஞசித்தம்பி, பெண்டிக்கம்மா பாக்கியநாதன்.

100 யார் ஓட்டம் (மத்திய பிரிவு):- இந்திராணி கனகசபை, குலஞானநிதி நடேசன், ஜெயந்தி முத்துத்தம்பி.

மேற் பிரிவு:- கமலேஸ்வரி சுப்பிரமணியம், திலகேஸ்வரி இராமலிங்கம், செல்லம்மா பூதத்தம்பி.

கீழ்ப் பிரிவு:- பூலோக சுந்தரி இராமலிங்கம், சியாமளா பெரியதம்பி, இராசேஸ்வரி சின்னத்துரை.

ஈட்டி வீசல் (மேற்பிரிவு):- குலஞானவதி நடேசன், கமலாதேவி சேதுபதி, பத்மினி புஷ்பராணி.

உயரம்பாய்தல் (கீழ்ப்பிரிவு): திலகேஸ்வரி அழகராசா, சாந்தினி அழகராசா, இளவரசி வைத்திலிங்கம்.

கயிறடித்தல் (மேற்பிரிவு):- திலகேஸ்வரி இராமலிங்கம், திலகவதி விசுவலிங்கம், வசந்தராதேவி தங்கேஸ்வரராசா.

கயிறடித்தல் (மத்தியபிரிவு):- சாந்தாதேவி கந்தவனம், சிவசோதி கந்தசாமி, யோகமங்களம் சிவபாதசுந்தரம்.

கயிறடித்தல் (கீழ்ப்பிரிவு):- சிவஞானசுந்தரி சிவப்பிரகாசம், திலகேஸ்வரி அழகராசா, சாந்தகௌரி கெங்காதரம்.

220 யார்ஓட்டம் (மேற்பிரிவு): கமலேஸ்வரி சுப்பிரமணியம், இரத்தினசோதி சிதம்பரப்பிள்ளை, ஜெயலட்சுமி இராசையா.

220 யார் ஓட்டம் மத்திய பிரிவு).- சதீஸ்வரி விஞசித்தம்பி, ஜெயந்தி முத்துத்தம்பி, கமலேஸ்வரி குமார்.

150யார் ஓட்டம்(கீழ்ப்பிரிவு): சியாமளா பெரியதம்பி, இராசேஸ்வரி சின்னத்துரை, இளவரசி வைத்திலிங்கம்.

80 யார் கேடில்ஸ் (கீழ்ப்பிரிவு:- இளவரசி வைத்திலிங்கம், பூலோகசுந்தரம் இராமலிங்கம், சசிரேகை தாமோதரம்பிள்ளை.

80 யார் கேடில்ஸ் (மத்திய பிரிவு):- இந்திராணி கனகசபை, பரமேஸ்வரி சிவகுரு, விமலாதேவி சிதம்பரப்பிள்ளை.

80 யார் கேடில்ஸ் (மேற்பிரிவு):- இரத்தினசோதி சிதம்பரப்பிள்ளை, குலஞானமணி நடேசன், ஞானேஸ்வரி செல்லத்துரை.

அணிவகுப்பு:- 1 மேக்கற்ரேய்ட் இல்லம், 2 கிறீன்வூட் இல்லம், பாக்கர் இல்லம். 3 எவறெஸ்ட் இல்லம்.

சைக்கிள் ஓட்டம் 14 வயது:- இளவரசி வைத்திலிங்கம், இரஞ்சினி இராசையா, இளஞ்செல்வி வைத்திலிங்கம்.

சைக்கிள் ஓட்டம் 16 வயது:- சந்திரவதனா குமாரவேல், குலஞானவதி நடேசன்.

கயிறடிக்கும் அஞ்சல்:- எவறெஸ்ட் இல்லம். பாக்கர் இல்லம், மேக்கற்ரேய்ட் இல்லம்.

பந்துசெலுத்தும் அஞ்சல்:- எவறெஸ்ட் இல்லம், பாக்கர் இல்லம், கிறீன்வூட் இல்லம்.

440 யார் அஞ்சல்

கீழ்ப்பிரிவு:-எவறெஸ்ட் இல்லம், மேக்கற்ரேய்ட் இல்லம், கிறீன்வூட் இல்லம்.

மத்தியபிரிவு:- மேக்கற்ரேய்ட் இல்லம், பாக்கர் இல்லம், கிறீன்வூட் இல்லம்.

மேற்பிரிவு:- எவறெஸ்ட் இல்லம், மேக்கற்ரேய்ட் இல்லம், பாக்கர் இல்லம்.


**REGAL — JAFFNA**

**NOW SHOWING**

Daily 3 Shows. Sats & SunsFour

Robert Taylor

in

M. G. M's

**GUNSof WYOMING**

(East Man Colour)



**மகத்தான 6-வது வாரம்!**

**கிங்ஸ்லி வெலிங்டன் வெம்பிளி**

(கொழும்பு) (யாழ்ப்பாணம்) (கண்டி)

**எஸ். எஸ். ராஜேந்திரன் - விஜயகுமாரி**

நடிக்கும்



**நானும் ஒரு பெண்**

ஜூன் மீ 26-ந் திகதி முதல்

கெப்பிட்டல் - ரீகல்

மற்றும் சினிமாஸ் திரைகளில்

**கொஞ்சும் குமரி**


## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏழைகளுக்கு அன்னதானம் நடந்தது. இரவில் கூட்டம். அண்ணாமலை சர்வகலாசாலையைச் சேர்ந்த பேராசிரியர் வெள்ளைவாரணர் முதலியோர் பேசினர். அன்றுதான் முதல் முதல் அங்கு கூட்டம் நடப்பதாயும் இனி தொடர்ந்து கூட்டம் நடத்துவதென்றும் தெரிவித்தனர். ஈழத்துச் சைவமக்களின் பக்தியையும் பலர் பாராட்டினர். இதில் பங்கு பற்றமுடிந்தது பெருமகிழ்ச்சி அளித்தது.

அந்தக் கோவிலின் வெளிச்சுவர் முழுதும் "தந்தை பெரியார்வருகை" என்றுகொட்டை எழுத்தில் எழுதி இருந்தார்கள். பெரியார் ஈ. வே. ரா. சென்ற ஆண்டில் சிதம்பரம் வந்தாராம். அதுபற்றிய விளம்பரம் அது. புனிதமான இக்கோவில் சுவரில் "உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்..." என்ற சேக்கிழார் பெருமானின் பாடலை எழுதி இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்.

சுவர்களிலே இவ்வித விளம்பரங்களை எழுதுவதும் அதை அழிக்காமல் வருடக்கணக்காக அப்படியே விட்டுவைப்பதும் ஊரின் அழகைப் பாழ்படுத்துகின்றது. அதுவும் புனிதமான கோவில் சுவர்களில் இவ்விதம் எழுதுவது கூடாதென்று தடுக்க முடியாதா?

* * *

நாவலர் பள்ளிக்கூடத்துக்கு அங்கு மிக நல்லபெயர். அங்கு தேவார திருமுறைகளை மாணவ மாணவிகளுக்கு கற்பிப்பதாயும், ஒழுங்குமுறை மிகக் கண்டிப்பாக இருப்பதாகவும் பலர்மூலம் அறிய மிக மகிழ்ச்சியாகவும் பெருமையாகவுமிருந்தது.

ஆயுளில் ஒருமுறைதான் இலங்கையிலிருந்து யாத்திரை வர முடியுமென்று தெரிவித்தபோது அங்கு பலரும் வருத்தமும்வியப்புமடைந்தனர். ஆனால் இந்த "டெம்பரரி சட்டங்கள்" எல்லாம் உளுத்துப்போய், மீண்டும் பழையநிலை ஏற்படவேண்டுமென்று கூத்தப்பெருமானிடம் நேரில் முறையிட்டுவிட்டுத் திரும்பினேன்.

* * *

கறைவெண் கொடிமாட்
நெற்றி நேர் தீண்டப்
பிறைவந்திறைதாக்கும்
பேரம்பலந்தில்லைச்
சிறைவண்டறையோவாச்
சிற்றம்பலமேய
இறைவன் கழலேத்தும்
இன்பம் இன்பமே.
— திருஞானசம்பந்தர்

## "சாதி அடிப்படையில் . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் வட்டாரம் பிரிக்கப்படுவதை எதிர்க்கிறேன்.

'தற்பொழுதுள்ள நல்லூர் வட்டாரத்தில், வாக்காளர்கள் கூடுதலாக இருப்பதால், அவ்வட்டாரத்தில் எப்பகுதியைப் பிரித்து வேறு வட்டாரங்களுடன் சேர்க்கவேண்டும்? என்று கமிஷனர் கேட்டபொழுது, எனக்கு சாதகமாகவோ; என் தனிப்பட்ட நன்மையைக் கருதியோ வட்டாரத்தை பிரிக்கும்படி கேட்கமாட்டேன். அவ்வட்டாரத்திலுள்ள மக்கள் எல்லோரும் என் அன்பை பெற்றவர்கள். ஆதலால் நீங்கள் விரும்பியபடியும் வசதியானபடியும், எப்பகுதியையும் பிரிக்கலாம்' என்று திரு. துரைராஜசிங்கம் கூறினர்.

கமிஷனர்: கிராமசபைப் பகுதிகளை மாநகரசபையுடன் சேர்ப்பதையிட்டு என்ன கருதுகிறீர்கள்?

துரைராஜசிங்கம்: அப்பகுதி மக்கள் விருப்பத்தையும் உங்கள் விருப்பத்தையுமே அது பொறுத்திருக்கிறது. அப்பகுதி மக்களுக்கு விருப்பமில்லையென்றே கருதுகிறேன். கிராம சபையும், வரியிறுப்பாளர் சங்கமும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளன. ஏற்கனவே அங்குள்ள மக்கள் கிராமசபையில் குறைவாக வசூலிக்கப்படும் சோலைவரிக்கே எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்கள். இதிலிருந்தே அவர்களின் கருத்தை அறிந்து கொள்ள முடியும். நகர சபையுடன் அ பகுதிகளை சேர்த்தால் வரிச்சுமையை எப்படி தாங்குவார்கள்? அப்பகுதிகளிலுள்ள ஒரு சில பணக்காரர்கள் மட்டுமே இதனை விரும்புகிறார்கள். ஆனால் ஏழைத் தொழிலாளிகள் விவசாயிகள் முழுமூச்சாக எதிர்க்கிறார்கள்.

மாநகரசபை வட்டாரங்களை 21 ஆக அதிகரிக்க வேண்டுமென்று சபையில் தீர்மானிக்கப் பட்டது. புதிதாக கிராமசபை பகுதிகளை சேர்க்காமல் 23 வட்டாரங்களாக கூட்டப்பட வேண்டுமென்று விரும்புகிறேன்.

கமிஷனர்: ஒவ்வொரு வட்டாரத்திற்கும் 2000 வாக்காளர் வீதம்தான் இருக்க வேண்டும். தற்பொழுது நகரத்தின் வாக்காளர் தொகை 43,900 ஆக இருக்கிறது. இதன்படி 21 வட்டாரங்கள் தான் ஏற்படுத்தலாம். சில வட்டாரங்களில் 2000 வாக்காளர்களுக்கு கொஞ்சம் அதிகமாகவே இருந்தாலும், 2000 க்கு குறைவாக இருக்காது. கிராமசபை பகுதிகளையும் சேர்த்தால் மேலும் 2 வட்டாரங்களை கூட்டி 23 வட்டாரங்கள் ஆக்கலாம்.

சிறுபான்மை தமிழ் மக்களுக்கு யாழ்ப்பாணம் மாநகர சபையில் 3 வட்டாரங்கள் ஒதுக்கப்பட வேண்டுமென்று அகில இலங்கை திருவள்ளுவர் சபை, அரியாலை காந்தி சனசமூக நிலையம், அரியாலை கலைமகள் சனமூசக நிலையம் ஆகியவை யாழ்ப்பாண மாநகர சபை வட்டார விஸ்தரிப்பு கமிஷனர் திரு. மார்டின் முன்னிலையில் ஏகமனதாக தெரிவித்து கொண்டன.

இதுபற்றி அச்சங்கங்கள் மேலும் தெரிவித்ததாவது:

சிறுபான்மை தமிழர்களுக்காக 3 வட்டாரங்கள் ஒதுக்கப்பட வேண்டும். கதீட்ரல் வட்டாரத்தையும், அரியாலை, நாயன்மார்கட்டு ஆகிய இடங்களிலுள்ள சிறுபான்மை தமிழருக்கு ஒரு வட்டாரத்தையும் ஸ்ரேசன் வட்டாரத்திலுள்ள சிறுபான்மை தமிழருக்கு ஒரு வட்டாரத்தையும் ஒதுக்க வேண்டும்.

கலைமகள் சனசமூக நிலையத்தின் சார்பில் நிலையத் தலைவர் திரு. வ. இராசையாவும் காந்தி சனசமூக நிலைய சார்பில் அதன் தலைவர் திரு. நா. முருகேசனும், திருவள்ளுவர் சபையின் சார்பில் சபையின் தலைவர் திரு. அ. சிறிலும் கலந்து கொண்டார்கள்.

## மண்டேலா அப்பீல் செய்யார்

கேப்டவுன், ஜூன் 25

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட தென்னபிரிக்க தேசியத் தலைவர் திரு. மண்டேலாவும், மற்றும் 7 பேரும் தங்கள் தண்டனையை எதிர்த்து அப்பீல் செய்ய விரும்பவில்லை எனத் தெரிவித்திருக்கின்றனர்.

## இவர்களும் சித்தியெய்தினர்

பல்கலைக்கழகக்கலைப்பகுதிப் புகுமுகப் பரீட்சையில் சித்தியெய்திய வர்களன் விபரம் நேற்றைய ஈழநாடு பத்திரிகையில் வெளிவந்தது. அதனுடன் இப்பெயர்களையும் சேர்த்து வாசிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி:- எஸ்.பசுபதிப்பிள்ளை

வேலணை மத்திய மகாவித்தியாலயம்:- எஸ். மகேஸ்வரி, எஸ். ராஜேஸ்வரி, கே. ரத்தினபூபதி.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் (யாழ்ப்பாணம்):- எஸ். கனகமணி.


## வரி விளம்பரம்

**தேவை**

பலசரக்குக் கடை, புடவைக் கடை, சாப்புக் கடைகளில் 24 வருட வியாபார அனுபவம் உள்ளவருக்கு, மனேச்சர், கணக்கப்பிள்ளை அல்லது பில் கிளாக் வேலை தேவை. வேலைக்கு ஏற்ற படி சம்பளம் கோரப்படும். மேல்பார்த்து: ஈழநாடு. 545

**House To Let**

Spacious house with drainage, flush lavatory, shower bath To-Let at 9, Somasundaram Avenue, Jaffna-Contact Peter. 538

**கபிரியேல் தயாரிப்புகள்**

1. கபிரியேல் பெயின் ஓயில்
சகல நோவு, வீக்கம், வாதம் எதையும் குணமாக்கும். இன்னும் மாடுகளுக்கேற்படும் மேற்படி ரோகங்களும் குணமாகும்.

2. கபிரியேல் ஓயின் மென்ற்
சகல அவியல், புண், கட்டு எதையும் ஆற்றும் ஒரே புண் களிம்பு.

3. கபிரியேல் ஸ்பெஷல் பாம்
தடிமன், தலையிடி, சந்துளைவு போன்ற எல்லா வேதனைகளையும்தணிக்கவல்ல விசேஷ பாம்,
தயாரிப்பாளர்கள்:

GABRIELS, Chunnakam. 273

# 3 மாதத்துக்கு ஒருமுறை ராஜினமா!

## பதவிதுறப்புத் தீர்மானம் பற்றி நாகநாதன் விளக்கம்

கொழும்பு, வியா.

தமிழரசுக்கட்சி எம். பி.க்கள் மூன்று மாதத்துக்கொரு முறை தமது பதவியை ராஜினமாச் செய்து சுதந்திரத்துக்கும் சமஷ்டி அமைப்பின் கீழ் தமிழ் ராஜ்யத்துக்கும் மக்களின் ஆதரவைக் கோரி சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவார்கள் என்று நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் விடுத்துள்ள அறிக்கையொன்றில் ரெரிவித்துள்ளார்.

டாக்டர் நாகநாதன் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:-

தமிழரசுக் கட்சியின் திருக்கோணமலைத் தீர்மானம், வடக்கு கிழக்கு மாகாண தமிழ், எம். பி.க்களை பார்லிமெண்டில் உள்ள அங்கத்துவப் பதவிகளை விட்டு வெளியேறி தமிழ் ராஜ்யங்களை நிறுவுவதுபற்றி தமிழ் மக்கள் திடசங்கற்பத்துடன் தமது எண்ணத்தை வெளிப்படுத்தும் வகையில் சர்வ ஜன வாக்கெடுப்புக்கு நிற்குமாறுகேட்டுள்ளது.

கட்சிக் கொள்கையில் கூறப்பட்டுள்ளது போல சமஷ்டி அமைப்பின் கீழ் தனியுரிமையுடைய தமிழ் ராஜ்யத்தையோ அல்லது ராஜ்யங்களையோ நிறுவுவதே இத்தீர்மானத்தின் நோக்கம்.

தமது சுதந்திரம் பற்றி மக்கள் தாங்களே தீர்மானித்துக் கொள்ளும் உரிமை எவராலும் தடைசெய்யமுடியாத உரிமையாகும்.

இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டபொழுது சகல மொழி பேசும் மக்களும் சகல சமய மக்களும் தங்களுக்கும் அந்த சுதந்திரத்தில் சமபங்கு உண்டெனவும், தாமும் இலங்கையின் சக பிரஜைகள் எனவும் நம்பினர்கள் சிங்களமும் தமிழும் நாட்டின் தேசிய மொழிகளென சகல மக்களும் அப்போது ஏற்றுக்கொண்டதுடன், சர்வ விதத்திலும் விசேஷமுடைய ஆங்கிலம் புறக்கணிக்கப்படும் எனவும் எவரும் எதிர்பார்க்கவில்லை.

1948-ம் ஆண்டில் சுதந்திரமடைந்த பின்னர் சிங்கள மக்களின் உரிமை சிங்களவரல்லாதவர்களை கீழ் சாதியினராககிவிட்டது வருத்தப்படக்கூடியதே. தமிழர்களின் மதிப்பிற்குரிய மொழியும் பண்பட்ட கலாச்சாரமும் ஒன்றுக்குப்பின் ஒன்றுக பதவிக்குவந்த அரசாங்கங்களால் புறக்கணிக்கப்பட்டன.

தமிழ் எம். பி.க்கள் பதவிகளை ராஜினமாச் செய்த பிறகு அவர்களோ அல்லது அவர்களது பிரதிநிதிகளோ சமஷ்டி அமைப்பின் கீழ் தனித்தமிழ் ராஜயங்கள் அமைப்பதை வைத்து போட்டிக்கு நிற்பார்கள். ஏராளமான தமிழ் மக்கள் தங்கள் சுயமரியாதைக்கும் சுதந்திரத்திற்குமாகவே வாக்களிப்பார்கள் என நான் நம்புகின்றேன். இவ்விதம் மூன்று மாதத்திற்கொருமுறை, தனித்தமிழ் ராஜ்யங்கள் அமைக்கக்கோரி போட்டிக்கு நிற்போம்.

இது இவ்விதமிருக்க பார்லிமெண்டிற்கு வெளியே வேலையற்றிருக்கும் தமிழ் வாலிபர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க பெருமளவில் வடக்கு, கிழக்கிலுள்ள காணிகள் திருத்தப்பட்டு பயிர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் கைத்தொழில், குடிசைக் கைத்தொழில் மீன்பிடி முதலியவற்றிலும், ஈடுபடுத்தப்படுவர். இது ஆரம்பத்தில் மிகக் கடுமையமான காரியாகத்தென்பட்டாலும் மிகவிரைவில் அதை அடைந்துவிடலாம்.

---

## பல்கலைக்கழக பிரிவு அமைப்பு

### மீண்டும் ஒத்திவைப்பு

நல்லூர் வெள்ளி

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கும் இலங்கை பல்கலைக் கழகப் பிரிவின் ஆரம்பம் அடுத்த ஆண்டுவரை பின்போடப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பல்கலைக் கழகப் பிரிவை ஆரம்பிப்பதற்கு வேண்டிய நிதி இல்லாமையே இதற்கு காரணமெனச் சொல்லப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகப் பிரிவு ஆரம்பிக்கப்படுவதற்கான முயற்சிகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன. யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகப் பிரிவு அமைக்கப்படும் போது இவ்வருடம் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் இங்கேயே கல்வி பெறுவர் என்று எதிர்பார்க்கப்பட்டது.

கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி அடுத்த வாரம் யாழ்ப்பாணம் வரும்போது யாழ்ப்பாணத்திலுள்ள பல கல்லூரிகளுக்கும் சென்று நிலைமையைப் பரிசீலனை செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

## தமிழ் நூல் அன்பளிப்பு

புதுடில்லி, ஜூன் 25

தமிழ், தெலுங்கு, ஆகிய மொழிகளிலுள்ள புத்தகங்கள் போர்ட்பிளயரிலுள்ள கல்வி போர்டிடம் இலவசமாக வழங்கப்பட்டது.

## அரசாங்க அதிபரிடம் முறையீடு

இராமநாதபுரம், வியாழன்

கிளிநொச்சிப்பகுதியைச் சேர்ந்த இராமநாதபுரம் குடியேற்ற வாசிகள் தங்களின் கமங்களின் சிறுபோக வேளாண்மைக்குப் போதிய அளவு தண்ணீர் வாய்க்காலில் வராததை முன்னிட்டு பயிர்கள் வாட்டமுறுவதை யாழ். அரசாங்க அதிபரிடம் நேரில் முறையிடுவதற்கு நூற்றுக்கு மேற்பட்ட குடியேற்ற வாசிகள் யாழ்ப்பாணம் கச்சேரிக்குச் சென்றனர்.

இரணமடு குளத்தில் இருந்து எவ்வளவு தண்ணீர் வந்தாலும் அதை வட்டக்கச்சியல் உள்ளவர்கள் மறித்துத் தங்கள் கமங்களுக்கு தினசரி பாய்ச்சுகிறுன்ருர்கள். இக்குறையை இங்குள்ள அதிகாரிகளுக்கு முறையிட்டும் அவர்கள் பாராமுகமாய் இருப்பதை முன்னிட்டு யாழ் அதிபரிடம் கூறி வட்டக்கச்சியை மறித்து சிலநாட்கள் இராமநாதபுரத்திற்கு கொடுத்து பாய்ந்தபின் இங்கு வராமல் மறித்து வட்டக்கச்சிக்குக் கொடுப்பது இப்படி முறையாக தண்ணீர் தரும்படி அதிபரிடம் கேட்பதாகத் தீர்மானித்து இக்குழு இன்று கச்சேரி சென்றது.

---

## நெல்லியடியில் 100 ரூபாய் பீதி

உடுப்பிட்டி, புதன்

நெல்லியடியில் நூறு, ஐம்பது ரூபாய் நோட்டுகளை வைத்திருப்பவர்கள் அவற்றைச் சில்லறையாக மாற்றுவதற்குத் தவித்துத்திரிகிறுர்கள். 100, 50 ரூபாய் நோட்டுகள் செல்லாது என்னும் வதந்தியே இப்பீதிக்குக் காரணமெனத் தெரிகிறது.

50சதத்திற்குட்பட்ட சாமான்கள் வாங்குவதற்குக்கூட கடைகளில் 100 ரூபாய் நோட்டுகளுடன் வருகிறுர்கள்,

---

## வர்த்தகர்களின் கோரிக்கை

கொழும்பு, வியாழன்

இறக்குமதி ஏற்றுமதி வர்த்தகத்தை கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்திடம் ஒப்படைக்கும் திட்டத்துக்குப் பதில் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்துக்கும் தனிபபட்ட வர்த்தகர்களுக்கு மிடையில் விநியோகத்தில் போட்டியை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் திட்டம் வகுக்குமாறு வர்த்தக, விநியோக மத்திரி திரு. டி. பி. இலங்கரத்தினவுக்கு இலங்கையர் வர்த்தகசங்கம கோரிக்கை விடுத்துள்ளது.

---

## குளத்திருத்தம்

சுழிபுரம், வியர்ழன்

சுழிபுரம் கிராமசபையில் திருவடி நிலையிலுள்ள காணபபடும் சிறு குளக குண்டுகள் சிரமதான முறையில் திருத்தம் செய்யபபட்டுள்ளது. மாடுகள் தண்ணீர் குடிபபதற்கு ஏற்ற முறையில் நல்ல முறையில் திருததப்பட்டு குண்டிலிருந்த சேறுகள் அள்ளப்பட்டுள்ளன. இப்பணியை சுழிபுரம் வாலிபர்கள் செய்தார்கள்.

---

## இந்திய அரசாங்கம் வழங்கும் உபகாரச் சம்பளம்

கொழும்பு வியாழன்

பட்டம்பெற்றபின் டில்லியில் மேற்படிப்பு பயில்வதற்கென இலங்கையிலுள்ள இரு பெண்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்க இந்திய அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

இரு வருடங்களுக்கு மாதத்துக்கு ரூபா 300 விதம் இந்த உபகாரச்சம்பளம் வழங்கப்படும்.

# 'திருமலைத் தீர்மானம் கொள்கைக்கு முரண்'

## பதவி துறக்கச் சொல்வதற்கு செயற்குழுவுக்கு அதிகாரமில்லை'

### கோப்பாய் எம். பி. கூறுகிறார்

யாழ்ப்பாணம் வெள்ளி

தமிழரசுக்கட்சி எம். பி.க்கள் பதவியை ராஜினமாச் செய்துவிட்டு மீண்டும் போட்டிக்கு நிற்கவேண்டும் என்று கட்சி அண்மையில் செய்துகொண்ட தீர்மானம், கட்சியின் அடிப்படைக்கொள்கைக்கே முரணனதென்றும், அது கட்சியின் சீர்குலைவுக்கே சமமானதென்றும் கோப்பாய் எம். பி. திரு. எம். பாலசுந்தரம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

கட்சியின் அடிப்படைக் கொள்கைக்கு முரணுன தீர்மானம் இயற்றுவதற்கு செயற்குழுவுக்கு அதிகாரமில்லையெனவும் திரு. பாலசுந்தரம் 'ஈழநாட்'டுக்கு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிபபிடபபட்டுள்ளதாவது:-

இலங்கைக்கு சமஷ்டி அரசு முறையே உகந்ததென்பதே கட்சியின் கொள்கையாக இருந்தது. பிரிவினை எமது கொள்கையாக எபபோதும் இருந்ததில்லை. அடிபபடைக்கொள்கைக்கு முரணன தீர்மானம் கொண்டுவரபபட்டால் கட்சி இனி செயல்படாது என்பதே அர்த்தமாகும்.

1962-ம் வருடாந்த மகாநாட்டில் தெரிவுசெய்யபபட்ட இந்த செயற்குழுவுககு கட்சியின் அடிபபடைக் கொள்கைககு முரணன தீர்மானம் இயற்ற அதிகாரம் உண்டா என்பது சந்தேகத்துககுரியது. எந்தச் சந்தர்பபத்திலும் செயற்குழுவுககு கட்சியின் சார்பில் தீர்மானம் இயற்ற உரிமையில்லை.

திரு. வி. சுந்தரலிங்கமும் அவரது ஆதரவாளர்களுமே தனித்தமிழ் நாடு பற்றி கூறி வந்தார்கள். அபபொழுது பிரிவினை உகந்ததல்ல எனச்சொல்லிக் கண்டித்தோம். திருமலையில் கூடி இவ்வித முடிவுககு வந்த தாங்கள் சொன்னவற்றை மறந்து தங்கள் வழியை பின்பற்றவேண்டும் என விரும்புகிருர்கள் போலும். எங்களில் பலரால் அபபடி செய்யமுடியாது, ஏனெனில் சமஷ்டி அரசே உகந்ததென இபபோதும் நாம் நினைக்கின்ருேம்.

கட்சி மத்திய குழுவின் தீர்மானம் குறித்து டாகடர் ஈ. எம். வி. நாகநாதன் வெளியிட்ட விளக்க கருத்துப்பற்றி அபிப்பிராயம் தெரிவிக்கையில், மூன்று மாதத்துக்கொரு முறை போட்டிக்கு நிற்பதென்ற கோமாளிக்கூத்தை மக்கள் ஒரு நிமிடம்கூட சகித்துக்கொள்ள மாட்டார்கள் என தெரிவித்தார்.

திரு. சுந்தரலிங்கம் இவ்விதம் முன்னர் செய்து பட்டின சபை தேர்தலில்கூட தோல்வியடைந்தார் என்பதையும் திரு. பாலசுந்தரம் குறிப்பிட்டார்,

---

## புன்னலைக்கட்டுவனில் பெரியபுராண பிரசங்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யோகர் சுவாமியின் ஞாபகார்த்தமாக பெரியபுராணத்தை மக்களுக்குப் புகட்ட வேண்டுமென்று சுவாமியாரின் பக்தர் குழு தீர்மானித்தபடி தற்பொழுது வெள்ளிக்கிழமை தோறும் கோவில்களில் பெரிய புராணப் பிரசங்கங்கள் நடைபெற்றுவருகிறது.

அதன் பிரகாரமாக இன்று புன்னலைக்கட்டுவன் வடக்கு நாச்சிமார் கோவிலில், "எறிபத்தநாயஞர்" என்பது பற்றி திரு. வி. நல்லையா பிரசங்கம்செய்வாரென அறிவிக்கப் பட்டுள்ளது.

## மன்னூரில் கலைவிழா

நல்லூர், வெள்ளி

இலங்கை கலைக்கழக தமிழ் நாடகக் குழுவின் ஆதரவில் மன்னூர் பிரதேச கலாமன்றம் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் கலைவிழாவொன்றினை நடாத்த ஏற்பாடுகள் செய்துள்ளது. முற்றவெளித் திடலில் இந்த விழா நிகழும். கைப்பணிப் பொருட்காட்சி ஞாயிறன்று நடைபெறும்.

சனிக்கிழமை அண்ணவி புலவர் மகாநாடு நடத்தப்படும். கலாநிதி சு. வித்தியானந்தன் தலைமையில் நடைபெறும் இம் மகாநாட்டில் மன்னூர் எம். பி. திரு. வி. ஏ. அழகக்கோன், கலாச்சார அதிபர் திரு. பாலித வீரமன் ஆகியோர் கலந்துகொள்வர். மன்னூர் மாவட்டத்திலுள்ள புலவர், அண்ணவிமார்கள் இந்த மகாநாட்டில் கௌரவிக்கப்படுவார்கள்.

இந்த விழா நிகழ்ச்சிகளை இலங்கை வானெலியினர் ஒலிப்பதிவு செய்து ஒலிபரப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

---

## ஷோம்பே நாடு திரும்புகிருர்

மாட்ரிட், ஜூன் 25

முன்னுள் கட்டாங்கா தலைவர் திரு. ஷோம்பே தமது சொந்த ஊரான லியப்போல்ட்விலிக்குத் திரும்பிக்கொண்டிருக்கிருர் என அறிவிக்கப்பட்டது.

---

## இன்று

வில்லூன்றிப்பிள்ளையார் கோவிலில் கண்ணப்பபுராண படன பூர்த்தியாக திரு. க. சுப்பிரமணியம் 'திருநீலகண்டர்' பற்றிச் சொற்பொழிவு ஆற்றுவார்.

★

சுழிபுரம், வியாழன்

இன்று வெள்ளிக்கிழமை வழககம்பரை அம்மன்கோவிலில் பூங்காவனம் நடைபெறுகிறது. விசேட அபிஷேக ஆராதனையும் இரவு உயர்தர மேளககச்சேரியும்நடைபெறும்

---

## இரண்டு நீக்ரோ சுட்டுக் கொலை

ஜோர்ஜ்டவுன், ஜூன் 25

ஜோர்ஜ் டவுனில் நேற்று இரண்டு நீக்ரோக்கள் இயந்திரத் துப்பாக்கியினல் சுட்டுக் கொல்லப்பட்டனர். நீடித்து வரும் இனக்கலவரம் காரணமாக இதுவரை இங்கு 61 பேர் மாண்டுள்ளனர். நேற்றும் நேற்று முன்தினமும் 23 வீடுகள் முற்ருக நாசமாயின.

---


## ஊர்காவற்றுறை பட்டினசபை விளம்பரம்

1-6-64 திகதியிட்ட விளம்பரத்தில் குறிக்கப்பட்ட வேலைகளுக்கான கேள்விகள் 1964-ம் ஆண்டு ஆனிமாதம் 27-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப் படும்.

வ. ச. ஐயாத்துரை,
தலைவர்.

பட்டினசபை-அலுவலகம்,
ஊர்காவற்றுறை, 20-6-64.
யோ. பெ. அ. 616



இன்று ஆரம்ப நன்னுள்

# எவர்ஷைன் மெட்டல் இன்டஸ்ரீஸ்

எவர்ஷைன் மெட்டல் உற்பத்தியாளர்களும்
மின்சார மூலம் நவீன முறையில்
முலாம் பூசுபவர்களும் (இலெக்ரோபிளேட்டிங்)
ஸ்ரான்லி வீதியிலுள்ள இளையதம்பி கட்டடத்தில்
அமையப்பெற்ற இந்த ஸ்தாபனத்தை

## யாழ். மேயர் திரு. T. S. துரைராசா

இன்று பிற்பகல் 5 மணிக்கு திறந்துவைப்பார்.
அபிமானிகள் அனைவரும் வருக!



இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனதாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டுஜூன் மாதம் 26-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.